# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 07 வியாழக்கிழமை (23.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 330


## நேற்று விடிகாலைப் பொழுதினிலே

# காங்கேசன் துறைமுகத்தில் 2 கப்பல்கள் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23

நேற்று விடிகாலைப் பொழுதில், காங்கேசன் துறைமுகத்தில் வைத்து இரண்டு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.2500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிவந்த 'நிமலவ' என்ற கப்பலும் 3500 மெற்றிக் தொன் சிமெந்து ஏற்றி வந்த 'றுகுணு' கப்பலுமே அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகின என்று அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பொதுமக்களின் உணவு விநியோகத்துக்கெனக் கூறிக்கொண்டு, படையினரின் வழங்கல் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த கப்பல்கள் மீதே கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவை ஒரு புறமிருக்க, இராணுவத்தினருக்கான விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும் 'லங்கா முடித்த' என்ற கப்பல் காங்கேசன்துறைமுகத்தில் நேற்று தரித்து நின்றது என்றும், அதன் பாதுகாப்புக்கென- அந்தக் கப்பலைச் சுற்றி-.றுகுணு, நிமலவ, பின்ரான், மாதா ஆகிய கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்றும், அதிகாலை 4.00 மணியளவில் 'மாதா', பின்ரான் ஆகியன அங்கிருந்து புறப்பட்ட கையோடு கடற்புலிகளின் அணிகள் துறைமுகத்துக்குள் ஊடுருவித்தாக்குதல் நடத்தின என்றும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

## பொருள்களுடன் மயிலிட்டிக்கு மீட்டு வரப்பட்டன

-அரசு

கரும்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான கப்பல்கள் இரண்டும் அவை ஏற்றி வந்த பொருள்களுடன் மயிலிட்டி துறைமுகத்துக்கு கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல சொன்னார்.

தொடர்ந்து உணவு மற்றும் பாவனைப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் வடக்கே பணியில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

வடக்கில் வாழும் மக்களுக்கு அரசு அனுப்பும் உணவுப் பொருள்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு கப்பல் மூழ்கடிப்பு; மற்றது கடும் சேதம்

-புலிகள்

யாழ். குடாநாட்டில் உள்ள படையினருக்கு ஆயுதங்கள் உட்படப் பிரதான வழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த கப்பலே தமது விசேட கடற்புலிக் கொமாண்டோக்களால் மூழ்கடிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

பொதுமக்களின் உணவு விநியோகத்துக்கெனக் கூறிக்கொண்டு படையினரின் வழங்கல் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் புலிகள் தெரிவித்தனர்.

இந்தக் கரும்புலித்தாக்குதலில் கடற்புலிகளின் மகளிர் (16 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே →**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குரிய **கணிதம் -1 வினாத்தாள்** பிரபல கணித ஆசிரியர் சோ.கிருஷ்ணதாஸ் (யாழ். இந்துக் கல்லூரி) தயாரித்து அளிக்கிறார்.

*அடுத்த மாதம் தொடக்கம் மின்சாரக் கட்டணத்தில் மாற்றம் வருகிறது - 15 ஆம் பக்கத்தில் செய்தி*

## றுகுண மூழ்கடிப்பு; நிமலவ சேதம் - கடற்படையினர்

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் தனியார் மற்றும் லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான 3800 மெற்றிக்தொன் சிமெந்தை ஏற்றிக்கொண்டு வந்து தரித்து நின்ற றுகுணு கப்பலையே புலிகள் தாக்கி மூழ்கடித்தனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். இந்தக்கப்பல் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தது என்றும் கடற்படையினர் கூறினர்.

"தனியாருக்குச் சொந்தமான பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்திருந்த நிமலவல என்ற மற்றொரு கப்பல் கடற்புலிகளின் தாக்குதலில் சிக்கி பலத்த சேதமடைந்தது. எனினும், அந்தக்கப்பல் மூழ்கவில்லை. அதிலிருந்து பொருள்கள் வேறு கப்பலுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன" என்று நேற்று நண்பகல் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## ஹொரவப் பொத்தனையில் தமிழரின் சடலம் மீட்பு

திருமலை, ஒக். 23

திருகோணமலை, ரொட்டவெவ - ஹொரவப் பொத்தானை இரத்மலை காட்டுப் பகுதியில் இருந்து சூட்டுக்காயத்துக்கு இலக்காகி உயிரிழந்த தமிழர் ஒருவருடைய சடலத்தை நேற்றுமுன்தினம் மாலை (16 ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து இன்று பூரண ஹர்த்தால்

## ஈ.பி.டி.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் இன்று வியாழக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் கடைகள், வேலைத்தளங்கள், திணைக்களங்கள், பாடசாலைகள் உட்பட அனைத்தையும் மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மக்களைக் கேட்டுள்ளது.

குடாநாட்டு மக்களுக்கு அரிசி, சீனி, கட்டடப் பொருள்கள் மற்றும் பொருள்களை ஏற்றி வந்த இரண்டு கப்பல்களை விடுதலைப் புலிகள் தாக்கியமைக்கு கண்டனம் தெரிவிப்பதற்காகவே பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) நேற்று விடுத்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## 25 உணவு லொறிகள் இன்று வன்னி செல்லும்!

கொழும்பு, ஒக்.23

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரண உணவுப் பொருள்கள் அடங்கிய 25 லொறிகள் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான இந்த உணவுப் பொருள்கள் அரச நிதியில் இருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் நேற்று முன்தினமும் 25 (16 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் நேற்று அதிகாலை விழுந்த ஷெல்லினால் கணவனும் மனைவியும் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 23

மல்லாகம் நீலியம்பனை பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த முருகையா உதயகுமார் (வயது-42), உதயகுமார் வசந் தநாயகி (வயது-36) ஆகியோரே படுகாய மடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை நிலைமை குறித்து மீண்டும் இந்தியா கவலை!

## நாடாளுமன்றில் பிரணாப் முகர்ஜி பேச்சு

புதுடில்லி, ஒக்.23

இலங்கை நிலைவரம் குறித்து மீண்டும் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள இந்தியா, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் நேற்று இதனைத் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் தென்பகுதி அயல்நாடு எதிர்கொண்டுள்ள பிணக்கைத் தீர்ப்பதற்கு அமைதி வழி அரசியல் தீர்வே அவசியம்" என்று அவர் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தம் அவசரம் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 'ஏ' நெகட்டிவ் ('A' Neg) வகை இரத்தம் மிகவும் அவசரம் தேவைப்படுகின்றது.

எனவே 'ஏ' நெகட்டிவ் குருதி வகையை சேர்ந்தவர்கள் மிகவும் அவசரமாக இரத்ததானம் செய்து உதவுமாறு யாழ். இரத்த வங்கி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் கேட்டுள்ளார்.

## 70 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### ஜேம்சன் ஜயசீலின்

தனது 70 ஆவது பிறந்தநாளை இன்று (23.10.2008) வியாழக் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை நெல்லியடி தேவன் குடும்பம், கனடா நந்தன் குடும்பம், உடுவில் ஜெயா குடும்பம், லண்டன் ஞானா குடும்பம், நவாலி யூலி குடும்பம், நவாலி சாளற் குடும்பம், கனடா சத்தி குடும்பம், லண்டன் வைலற் குடும்பம், நவாலி றொபேட் குடும்பம், நவாலி ஜெனி குடும்பம் யேசுவின் அருள் பெற்று அன்பிலும், பண்பிலும், சிறந்த அரவணைப்பிலும் விவேகத்துடனும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:
மகன் - வின்சன்ற்,
மருமகள் - சுகன்யா,
பேரப்பிள்ளைகள் - ஜெனோ, கிற்றோ.

நவாலி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக் கழக வெளிவாரி பிரிவில் கடமையாற்றும் து.யோகேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

### துரைச்சாமி செல்லம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

அயலக நண்பர்கள்

யாழ்ப்பாணம்.

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 25.10.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

ராஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

## யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 24.10.2008 வெள்ளிக் கிழமை பி.ப. 3 மணிக்கு கல்லூரி "மஸ்கன்" மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர், பழையமாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாரதாமணி பாலசுப்பிரமணியம்



நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாமணி பாலசுப்பிரமணியம் நேற்று (22.10.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திரு. திருமதி முருகேசு தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு. திருமதி விசுவலிங்கம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் முருகேசு பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியும், பேரின்பநாதன், தமிழ்வாணி, சத்தியவாணி, சசிகலைவாணி, மதிவண்ணன், திருநாதன், ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, பகீதரன், தியாகராசா, கஜனிகலிங்கம் (நேசன்), சசிகலா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், கிருத்திகன், கௌசிகா, திவ்வியா, சங்கீத, தர்மிலன், கிரிஷாந், கீர்த்திகன், தியாகரிஷி, மதுமிதா ஆகியோரின் அன்புப் பாட்டியும் கந்தையா, அமுதாம்பாள், சரவணமுத்து, சிவக்கொழுந்து, பத்மாவதி, ஏகாம்பரம், கிருபாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சரோஜினிதேவி, சதாசிவம், கனகேஸ்வரி, தம்பிஐயா, அம்பலவாணர், முத்துலெட்சுமி, மகாலிங்கசிவம், காமாட்சியம்மா, நாகரெத்தினம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

4ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
(79405) பா.பேரின்பநாதன் (மகன்).





விடுமுறை நாட்களிலும்

இத் தீபாவளி திருநாளில் உங்கள் அன்புக்குரியவர்களின் நல்வாழ்த்துக்கள் எப்பொழுதும் உங்களைச் சேரும்

வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பும் பணத்தை பெற்றுக் கொள்ள உங்கள் வசதிக்காக MMBL மணிமாஸ்டர் நிலையங்கள் யாழ் குடா நாட்டில் திறந்திருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

011 452 99 99 / 077 791 55 43

WESTERN UNION

மணி டிரான்ஸ்பர்

MMBL Money Master

செல்லுமிடமெல்லாம் நாமிருப்போம்

யாழில் MMBL மணி மாஸ்டர் நிலையங்கள்

யாழ்ப்பாணம் - மாணிப்பாய் - சுண்ணாகம் - நல்லூர் - சங்கானை

பருத்தித்துறை - இனுவில் - நெல்லியடி - கைதடி - கோண்டாவில்

- திருநெல்வேலி


## கணனி தொழில்நுட்பவியலாளர்கள்

கணனித் துறையில் கடமை புரிவதற்கு குறித்த துறைகளில் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

நேரில் சமுகமளிக்கவும்: சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

- கணனி பக்கவடிவமைப்பாளர்கள்
- ஈ.மெயில் ஒப்ரேட்டர்
- CD ஒலி-ஒளி பதிப்பாளர்
- போட்டோஸ்ரட் மெசின் இயக்குநர்

### தர்ஸா தமிழ்ப் பதிப்பகம்

இராச வீதி, அச்சுவேலி.
0774083698

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் சிவன்ரூபன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சிவன்ரூபன் (ஓய்வுபெற்ற அதிபர், யாழ்.மத்திய கல்லூரி) நேற்று (22.10.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பாலுப்பிள்ளை - மகாலட்சுமி தம்பதியினரின் மூத்த மருமகனும், விமலரஞ்சிததேவி (பேபி)யின் அன்புக் கணவரும், சிவகௌரி (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சிவதர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவகீஸ்வரன் (ஆசிரியர், யா/சென். மேரிஸ் வித்தியாலயம், OLR), பகீரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், லோஜனா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), நர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவபாலன் (உரும்பிராய்), சிவன்நேசன் (சங்கானை), சிவன்தாசன் (கந்தர்மடம்), சிவகாமி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரசிங்கம் மற்றும் Dr.மகேந்திரயோகம் (லண்டன்), சுசிலா இந்திராணி (கொழும்பு), சரோஜாசந்திரவதனா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரஞ்சிதா சிவன்ரூபன் (மனைவி),
க.தவகீஸ்வரன் (மருமகன்).

19/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (79434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழகத்தின் முக்கிய கோரிக்கையை கவனத்தில் எடுக்குமா புதுடில்லி அரசு?

இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தச் செய்வதற்கு இந்தியாவின் மத்தியில் ஆளும் புதுடில்லி அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி, அதற்கு இரண்டு வார காலக் கெடு வழங்கி தமிழகத்தின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒருவாரம் கடந்து விட்டது. காலக்கெடு முடிய இன்னும் ஆறு நாள்களே உள்ளன.

ஆனால், இலங்கையில் யுத்தத்தை நிறுத்தச் செய்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் இந்திய மத்திய அரசு இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

யுத்தத்தை நிறுத்துவதற்கு மத்திய அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து நாடாளுமன்றுக்குச் சென்றுள்ள நாற்பது எம்.பிக்களும் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்து விடுவார்கள் என்றும் தமிழக அனைத் துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிந்ததே.

ஏற்கனவே, மத்திய அமைச்சரவையில் இடம்பெறும் இரண்டு அமைச்சர்கள் மற்றும் ஐந்து இணை அமைச்சர்கள் அடங்கலாக சுமார் இருபது பேர் எதிர்வரும் 29 ஆம் திகதியிட்டு தமது இராஜிநாமாக் கடிதங்களைத் தமிழக முதல்வரிடம் கையளித்து விட்டனர்.

29 ஆம் திகதிக்கு முன்னர் - அடுத்த ஆறு நாள்களுக்குள் - இலங்கையில் யுத்தத்தை நிறுத்த காத்திரமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கத் தவறுமானால் - தமிழக அமைச்சர்கள் உட்பட எம்.பிக்களின் இராஜிநாமாக் கடிதங்களை நாடாளுமன்ற சபாநாயகரிடம் அனுப்பி வைப்பதைத் தவிர தமிழக முதல்வருக்கு வேறு மார்க்கமே இல்லை.

தமிழக எம்.பிக்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியை இராஜிநாமாச் செய்வார்களாயின் -

ஏற்கனவே 'தொத்துப் பொறி' பெரும்பான்மையில் ஆட்சியைக் கொண்டிழுக்கும் இந்தியாவின் மன்மோகன் அரசு கவிழுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் உறுதி.

ஆகவே, இலங்கை யுத்த விவகாரத்தை ஒட்டித் தமிழக எம்.பிக்கள் தாம் விதித்த நிபந்தனைப்படி தமது பதவிகளை இராஜிநாமாச் செய்வார்களா என்பதே கேள்வி.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தக் காத்திரமான நடவடிக்கையை இந்திய மத்திய அரசு எடுக்கவேண்டும் என்பதே தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் ஏக தீர்மானம்.

இந்திய மத்திய அரசு காத்திரமான நடவடிக்கை எடுத்தும், இலங்கை அரசு அதற்கு மசியாமல், முரண்டு பிடித்து போர்வெறித் தீவிரத்தில் தொடர்ந்து முனைப்புடன் நிற்குமானால், அதற்காக இந்திய மத்திய அரசைக் கவிழ்க்கக் கூடாது. அது இவ்விடயத்தில் தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் எடுத்திருக்கும்போது - அம் முயற்சிகள் இலங்கையின் பிடிவாதத்தால் தடைப்பட்டுப் போய்க் கிடக்கும்போது - அதற்காக இந்திய மத்திய அரசைப் பாதிக்கச் செய்யும் விதத்தில் செயற்படுவது பொருத்தமற்றது என்றெல்லாம் வாதிடப்படலாம். அத்தகைய வாதங்களில் நியாயம் இருக்கவே செய்யும்.

ஆனால், அதெல்லாம், தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானத்தைச் செயற்படுத்தும் நோக்கில் - இலங்கையில் யுத்தத்தை நிறுத்தச் செய்யும் எண்ணத்தில் - காத்திரமான நடவடிக்கைகளையும் முன் முயற்சிகளையும் இந்திய மத்திய அரசு எடுத்திருந்தால் மட்டுமே பொருத்தமானவை.

ஆனால் தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்தில் மிக முக்கிய விடயத்தை - இலங்கையில் யுத்தத்தை நிறுத்தச் செய்வதற்கான காத்திரமான நடவடிக்கையை - இந்திய மத்திய அரசு இதுவரை எடுக்கவில்லை என்பதும் -

இனிமேலும் எடுப்பதற்கான வாய்ப்பு ஏதும் அடியோடு இல்லை என்பதும் -

இப்போது வெட்ட வெளிச்சமாக அம்பலமாகி விட்டன.

''புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா, இலங்கைக்கு இதுவரை எந்த அழுத்தத்தையும் கொடுக்கவேயில்லை. இலங்கையின் நடவடிக்கைகளுக்கு இந்தியா நல்ல ஒத்துழைப்பு நல்கியே வருகின்றது.'' - என்று இலங்கை அரசின் சார்பில் அதன் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இலங்கை நாடாளுமன்றிலேயே பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

ஆகவே, தமிழகத்தின் அனைத்துக் கட்சி மாநாட்டுத் தீர்மானத்தின் பிரதான அம்சத்தை ஒட்டிய விடயத்தில் - யுத்தத்தை நிறுத்தச்செய்ய வேண்டும் என்ற விவகாரத்தில் - அத்தீர்மானம் எடுக்கப்பட்டு ஏழு நாள்கள் கழிந்தும் இந்திய மத்திய அரசு, வாய் மூல வற்புறுத்தலைக் கூட இலங்கைக்குத் தெரிவிக்கவேயில்லை என்பது தெளிவாகிவிட்டது.

அடுத்த ஆறு நாள்களுக்குள்ளும் அத்தகைய நடவடிக்கை எதையும் மத்திய அரசு எடுக்கும் என்பதற்கான அசுமாத்தம் ஏதும் கூடக் காணப்படவேயில்லை.

எனவே, இப்படியே இரண்டு வாரக் காலக்கெடு கழிந்த பின்னர் என்ன நடக்கப் போகின்றது என்பதே கேள்வி.

தமிழக எம்.பிக்கள் எல்லோரையும் இராஜிநாமாச் செய்யவைத்து - இலங்கைத் தமிழர் பேரழிவில் சிக்கியிருக்கும்போது அவ்விடயத்தில் திமிர்த் தனத்தோடு உதாசீனப் போக்கில் நடக்க முயன்ற புதுடில்லி அரசுக்குத் தகுந்த பாடம் புகட்டுவாரா தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி என்பதே இன்றைய முக்கிய வினாவாகும்.

# வன்னியில் பருவமழை ஆரம்பித்துள்ளமையால் இடம் பெயர்ந்த பாடசாலைகள் நெருக்கடிக்குள்

பருவ மழை தொடங்கியிருப்பதன் காரணமாக இடம்பெயர்ந்த பாடசாலைகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பவை வருமாறு:-

கடும் மழை பொழியத் தொடங்கியிருக்கின்றது. இடம்பெயர்ந்த பாடசாலைகள் இயங்குவது ஓர் ஒழுங்குக்கு வரும் முன்னரே மழை தொடங்கியிருக்கின்றது.

இதன் காரணமாக மாணவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக க.பொ.த. சாதாரண தேர்வுக்கு தோற்றுகின்ற மாணவர்கள் தேர்வுக் தயாராக முடியாத இடர் உள்ளது.

இடம்பெயர்ந்து உள நெருக்கீட்டிற்கு உள்ளாகியிருக்கும் மாணவர்கள் மத்தியில் உள ஆற்றுகை செயற்பாட்டினையும் மேற்கொள்ளவுள்ளோம் -என்றார் அவர்.

## வட்டு. இந்து பரிசில் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.23

வட்டு.இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி ஜெ. அருள்மயம் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவன் கே.பரஞ்சோதி, வைத்திய கலாநிதி கா. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்துவார். பரிசில்களை திருமதி பரமேஸ்வரி கணேஸ் வழங்கவுள்ளார். (201- 29)

## பெற்றோல் நிரப்பிய போது தீப்பிடித்தது மோ.சைக்கிள்

சுன்னாகம், ஒக்.23

மோட்டார் சைக்கிளை இயக்கிய நிலையில் கொல்கலனில் பெற்றோல் நிரப்பிய வேளை தீ மூண்டது.

இச்சம்பவம் நேற்று சுன்னாகம் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

எனினும் உடனடியாகவே செயற்பட்ட நிலைய ஊழயர்கள் தீயை அணைத்து ஏற்படவிருந்த அனர்த்தத்தைத் தவிர்த்தனர். (202-38)

# வலிகாமம் கல்வி வலய மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.23

வலிகாமம் கல்வி வலய கனிஷ்ட பிரிவு மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் பொ.சுந்தரலிங்கம் கலந்துகொள்வார். (50)

# பாடசாலை மாணவர்களுக்கு சமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.23

காரைநகர் மணிவாசகர் சபை காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் சைவசமய பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம்மாத இறுதிக்குள் பாடசாலை அதிபர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு சபையின் பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் கேட்டுள்ளார். இப் பரீட்சைகள் அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ளன.

இதேவேளை -காரைநகர் மணிவாசகர் சபை சமய பாடப் பரீட் சையை நடத்துவதோடு இவ்வாண்டு தொடக்கம் பண்ணிசைப்போட்டி, திருவாசக மனைப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பவற்றையும் பாடசாலை ரீதியாக நடத்துவதற்கு முன்வந்துள்ளதாக மணிவாசகர் சபையின் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகள் தரம் 2 தொடக்கம் தரம் 13 வரை ஆறு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளுக்குரிய விண்ணப்பப் படிவத்தை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும், சமயபாடப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் மணிவாசகர் சபை நடத்தும் திருவாசக விழாவின் போது பரிசளிக்கப்படும்.

சமய பாடப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப்பதக்கம் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (202-250)

# இளவாலை வடக்கு கிராம மக்களுக்கு கியூடெக் நிறுவனம் சுயதொழில் உதவி

சுன்னாகம், ஒக்.23

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் வாழ்வாதாரப் பிரிவு இளவாலை வடக்கு மற்றும் வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் நலிவுற்ற குடும்பங்களுக்குச் சுயதொழில் ஊக்குவிப்பினை வழங்கியுள்ளது.

4 பயனாளிகளுக்குத் தலா 55 ஆயிரம் ரூபா பெறுமதியான நல்லின 'ஜேர்சி' பசுமாடுகள் வழங்கப்பட்டு அவற்றுக்கான கொட்டில்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதே போல 10 பயனாளிகளுக்கு தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான 'ஜமுனாபாறி' ஆடுகளும் கொட்டில்கள் அமைப்பதற்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

5 பயனாளிகளுக்கு தலா 22 ஆயிரம் பெறுமதியான கோழிக்குஞ்சுகள், கூடு, தீவனம், தீவன உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

கியூடெக்- கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்திரு.ஜெயக்குமார் அடிகளார் அப்பகுதி கிராம சேவகர்கள் மற்றும் இளவாலை விவசாய சம்மேளனத் தலைவர் ப.தம்பிரத்தினம் ஆகியோர் முன்னிலையில் இவற்றைப் பயனாளிகளிடம் கையளித்தார். (202-38)

# 795ஆம் இலக்க இ.போ.ச. பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டமையால் பயணிகள் சிரமம்

சுன்னாகம், ஒக்.23

இளவாலையிலிருந்து தெல்லிப்பழையூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும் 795 இலக்க பஸ் சேவை கடந்த ஒரு மாத காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பயணிகள் பெரிதும் அவலப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தெல்லிப்பழையிலுள்ள பாடசாலைகள், பிரதேச செயலகம், வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் செல்வதற்கு இந்தப் பஸ்சேவையினையே பொதுமக்கள் நம்பியிருந்தனர். இச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், சந்தைகளுக்குச் செல்லும் விவசாயிகள், வியாபாரிகள் எனப் பலதரப்பினரும் பலத்த சிரமங்களை அனுபவிக்க நேர்வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இச்சேவையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-38)

## தீபாவளியை முன்னிட்டு மக்கள் வங்கிச் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.23

தீபாவளி தினத்தையொட்டி யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் கொடுக்கல், வாங்கல் சேவைகளுக்காக எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை திறந்திருக்கும் என வடவலய உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைக் கிளையில் இந்த விசேட சேவை இடம்பெறாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அன்றைய தினம் வைப்புச் செய்பவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (202)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 08 | 24.10.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: | ஏகாதசி பி.இ.04.31வரை |
| நட்சத்திரம் : | மகம் பி.ப.05.25 வரை |
| சுபநேரம் : | 06.02-07.32 |
| ராகுகாலம் : | 10.32-12.02 |

# கப்பம் கோரிப் பயமுறுத்திய நபருக்கு இரண்டு வருடங்கள் கடூழியச் சிறை

மந்திகை, ஒக்.23

கப்பம் கோரி பயமுறுத்தியதுடன் நகை மற்றும் பணம் என்பவற்றை அபகரித்த நபருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும் 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து பருத்தித் துறை நீதிமன்றம் தீர்பளித்தது.

5 இலட்சம் ரூபா கப்பம் கோரியதோடு, பயமுறுத்தி 70ஆயிரம் ரூபா தங்கச்சங்கிலியையும் 25ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்தவருக்கே 3,000 ரூபா அபராதமும் 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்பளிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த வியாபாரிமூலைக் கிராமத்தில் மாலை வேளை வீடொன்றுக்குச் சென்ற புலோலியைச் சேர்ந்த சிவகுமார் ஐங்கரன் என்பவர் வீட்டிலிருந்த பாடசாலை மாணவியைச் சுட்டுக் கொல்வேன், வீட்டிற்கு குண்டு வைப்பேன் என்று பயமுறுத்தி 5 இலட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளார். அத்துடன் அங்கிருந்த 70ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலிகளையும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் அபகரித்து சென்றுள்ளார் எனப் பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுவந்தன.

எதிரி கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். சாட்சிகளின் வாக்கு மூலங்களையடுத்து எதிரியை குற்றவாளியாக நீதிமன்றம் கண்டு கொண்டது.

நீதி மன்றம் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டான வீட்டினுள் அத்துமீறிச் சென்றதற்கும், கப்பம் கோரிப் பயமுறுத்தியமைக்கும் 6மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 1500 ரூபா அபராதமும் அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 6 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தது.

இரண்டாவது குற்றமான தங்கநகைகள், ரொக்கப்பணம் என்பவற்றை அபகரித்ததற்கு ஒன்றரை வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் 1500 ரூபா அபராதமும் அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

(202-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள், பிரதான வீதியில் புதிய நீதிமன்றத்துக்கு முன்பாக 4 பரப்புக் காணி தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. மேலும் பாங்சால் வீதியில் மூன்றாம் குறுக்குத் தெருவில் 4½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **நவலிங்கம்**
தொ.பே.:0779522521, 0776111419
அல்லது S.ஜெகான், கச்சேரியடி.
தொ.பே.:0776589415, 021222 2426

(79420)

## முக்கிய அறிவித்தல்

### சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
### வாக்காளர் இடாப்பு முடிவுறுத்தல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 30.09.2008 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளை நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 08.11.2008 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் சங்கச் செயலாளருக்கு அறியத் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**செ.மகேஸ்வரன்**
தலைவர்.

(C/555658)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் - 2007

1.கலைமாணி பகுதி - I 2005 & 2006
2.சிறப்புக் கலைமாணி பகுதி - I 2005 & 2006

மேற்படி பரீட்சைகளை 15.11.2008 (சனிக்கிழமை) தொடக்கம் 29.11.2008 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.11.2008 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-2223612என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

*பதில் பதிவாளர்*
*20.10.2008*

(C/555650)

## கண்ணீர் அஞ்சலி

மன்ற அங்கத்தவர் சு.லம்போதரன் (திருப்பதி பென்ஸி உரிமையாளர், சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் வி.சுப்பிரமணியம்**

அவர்கள் கடந்த 19.10.2008 அன்று காலமானார். அன்னாரின் மறைவுக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(சி/555657)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆங்கில ஆசிரியர்
தில்லைநாதன் இரவீந்திரநாதன்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் தில்லைநாதன் அழகம்மா**

அவர்கள் 18.10.2008 அன்று இறைவனடி சேர்ந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/செங்குந்தா இந்துக்கல்லூரி,
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

**நல்லுறவு மன்றம்.**

(79419)

## கண்ணீர் அஞ்சலி

தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக்
கிளையின் எமது சக உத்தியோகத்தர்
**விபுதராஜா சுதாகர்**
அவர்களின் ஆருயிர் புதல்வி

**செல்வி துஷாரா சுதாகர்**

அவர்களுடைய மறைவையொட்டி எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதுடன், துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும் சக உத்தியோகத்தர்களும்
**தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை.**

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு சந்திரபாலன்

நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சந்திரபாலன் (பாலன்) 20.10.2008 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கார்த்திகேசு இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் திரு.திருமதி ராஜன் ஜானகி தம்பதியரின் மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் சியாமளா, சுலோசனா, சுரேசினி, சுமதி, சுதாகரன், சிவாகரன், சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காயுச்சியநாதன், காயுச்சியாம்பாள், சந்திரகாந்தா, தயாபரி, சறோஜினி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), அமரர் கந்தையாபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/12, இருபாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு*
*[உப்புமடச்சந்தி].*

தகவல்:
சறோஜினி சுந்தரலிங்கம் *[சகோதரி]*.

(79422)

# பரிசளிப்பு விழா சனியன்று

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுவின் ஏற்பாட்டிலான பரிசளிப்பு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார். திருமதி பரமேஸ்வரி கணேஷ் பரிசில்களை வழங்குவார். (1)

# கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக்.23

தேசிய கல்வி நிறுவன கல்வி மாணிப் பட்ட நெறி முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அன்றையதினம் கல்வி சார் பாடங்களுக்கான ஒப்படைகள் வழங்கப்படவுள்ளதாகவும் முதலாம் வருட மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் தேசிய கல்வி நிறுவனத்தின் இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

# சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.23

சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி அருணா புண்ணியமூர்த்தி கலந்து கொள்வார்.

இந்த விழாவிற்கு 'கரிதாஸ்-கியூடெக்', 'வேல்ட்விசன்' நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றன. (202-325)

# தந்தை நல்லவாறு நடந்தால் பிள்ளையும் அவ்வழி நடக்கும்
## முன்பள்ளி விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம்,ஒக்.23

முன்பள்ளியில் கல்வி பயிலும் பாலர்களின் கல்வி முன்னேற்றம் அவர்களது பெற்றோர்களின் கைகளிலேய தங்கியுள்ளதூ. தங்களது பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர்கள் பக்கபலமாக இருந்து உதவி புரிய வேண்டும். ஆசிரியர்கள் மட்டும் பாடுபட்டால் போதாது 'தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி' என்பதற்கிணங்க ஒரு குழந்தையின் தந்தை நல்லபடி நடந்ததால் பிள்ளைகளும் நன்றாக வளர முடியும்.

ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையக் கலையரங்கில் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்தக் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இராசையா ஸ்ரீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் ஏ.எம். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஒரு பிள்ளையின் எதிர்காலம் முன்பள்ளியில் தான் அத்திவாரமிடப்படுகின்றது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்பதற்கிணங்க பிள்ளைகள் பாலப்பருவத்திலேயே நல்ல பழக்கவழக்கங்களைப் பழகிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும். நற்பிரசையாக மிளிரமுடியும் எனத் தெரிவித்தார்.

நிகழ்வில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி, சமுர்த்தி உத்தியோகத்தர் ரி.ஜெயச்சந்திரன், உளசமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி செலீன் அழகரத்தினம், ஆசிரியை திருமதி சந்திராதேவி சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய முன்பள்ளியின் முன்னாள் மாணவி செல்வி ரஜீத்தா கருணாசலம் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பாலர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (201)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்பு:- **வே.பத்மநாதன்**(கிச்சி)
*சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
தொ.பே:-0774048838.

### ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயம்
*கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்*

## மகாசபைக் கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலயத்தின் மகாசபைக் கூட்டம் நடைபெறும். அத் தருணம் முக்கிய விடயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதனால் மகா சபை அங்கத்தவர்கள் மட்டும் தவறாது சமுகந்தரவும்.

(79413) **ஆலய நிர்வாகம்.**

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

*பிறப்பு*
*23 * 12 * 1982*



*அழிப்பு*
*23 * 10 * 2007*

**அமரர் செ.கிறிஸ்ரி ஜெயந்தன்**
*(உரிமையாளர், வின்ரெல் கொம்ரெக்)*

அன்புக்கு இலக்கணமாய் பண்பில் உயர்ந்தவனாய்
பாசத்திற்கு உறைவிடமாய் எம்மோடு வாழ்ந்தவனே
உன் நல்வாழ்வை சகிக்காமல் காலத்தின் சோதனையால்
காலனவன் நின் உயிரை பறித்தது ஏனோ - நின்
ஆத்மா இறைவனில் இளைப்பாற இறைஞ்சுகிறோம்

*கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/555651)

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி புண்ணியவதி கனகசபை**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பத்மாவதி கனகசபை**

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
*கொக்குவில் இந்துக்கல்லூரி.*

(சி/555659)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1030 நிலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 03 12 35 52

21-10-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400124780 - 400145533

ஜக்போட் பரிசு ரூபா. 5,718,100/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 202,049 | 20/- | 4,040,980/- |
| 2 இலக்கங்கள் | 18,575 | 40/- | 743,000/- |
| 1 இல. + லக்கினம் | 18,288 | 60/- | 1,097,280/- |
| 2 இல. + லக்கினம் | 1,702 | 200/- | 340,400/- |
| 3 இலக்கங்கள் | 491 | 1000/- | 491,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 5,718,100/- | 5,718,100/- |
| மொத்தம் | | | 13,340,760/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 241,164 | | 13,840,760/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 400133384-6-43 |
| காலி | 400132877-5-15 |
| ஹப்புத்தோட்டை | 400129497-2-18 |
| மாத்தறை | 400127765-1-41 |
| கேகாலை | 400136443-2-46 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

# இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் இன்று
# தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத் திறப்பு விழா
# சிறப்பு மலர் - 23.10.2008

## நீண்டநாள் கோரிக்கை நிறைவேறுகிறது



நம் நாட்டின் வடவலயத்தின் வடபகுதி முழுநாட்டுடனும் இணையும் நாள் இது. இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரின் நீண்டகால கோரிக்கையை இன்று நிறைவேற்றி வைப்பதில் நாம் ஆனந்தம் அடைகின்றோம்.

வாடிக்கையாளர்களது ஆதரவும் வேணவாவும் அதனால் உண்டான உணர்வலைகளும் மற்றும் கல்விச் சமூகம், வர்த்தக சமூகம், அரச சேவை உழியர்கள் எனப் பல தரப்பட்டவர்களின் அமோக ஆதரவினால் இன்று இக்கைங்கரியம் நிறைவேறுகின்றது. இத்தனைக்கும் விடா முயற்சியுடன் எம்மை தொடர்ந்து தூண்டிய நெல்லியடிக் கிளையின் முகாமையாளருக்கும் சக ஊழியர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந.சிவரட்ணம்,
செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி, வடபிராந்தியம்.

## மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும்



இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரும் பல்வேறு சேவைகளில் ஒன்றான தன்னியக்க பணம் கொடுக்கல் வாங்கல் இயந்திர சேவையினை (ATM) ஆரம்பிப்பதனையிட்டு அதன் வாடிக்கையாளர்கள் பெருமகிழ்ச்சியடைகின்றனர். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் சுருக்கமடைந்திருக்கும் இவ் வுலகில் வங்கிச் செயற்பாடுகளில் மிகவும் முன்னேற்றமடைந்து காணப்படும் கணனிமயமாக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் வலைப்பின்னல் அமைப்பும், ATM சேவையும் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. வங்கிச் சேவையில் நீண்ட வரலாற்றினை கொண்ட இலங்கை வங்கியானது பல்வேறு சேவைகளின் ஊடாக பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை மக்களிற்கு வழங்கி வரும் திருப்திகரமான சேவைக் குக் காரணமாகவிருக்கும் வங்கியின் உயர் அதிகாரிகள், முகாமையாளர், வங்கி உத்தியோகத்தர்களைப் பாராட்டுவதுடன் அதன் பணி மேன்மேலும் சிறக்க இறைவனின் அருள் வேண்டி எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சி.சத்தியசீலன், பிரதேச செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.

## புதிய பரிணாம வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியடைகிறோம்



வடமராட்சியில் இன்று நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இரு இலங்கை வங்கிக் கிளைகள் 24 மணி நேரமும் பணம் பெற்றுக் கொள்ளக்கூடிய தானியங்கிப் பணப்பரிமாற்றல் இயந்திர வசதியுடன் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதை எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்களின் இன்றைய தேவைகளை நன்கறிந்து சமூகத்தின் வளர்ச்சிக்காக நெல்லியடி இலங்கை வங்கிக்கிளை தன்பணிகளை சர்வதேச வலைப்பின்னலுடன் இணைத்து மிக விரைவாகச் செய்து வருவது பாராட்டுக்குரியது.

வேகமாக வளர்ந்து வருகின்ற நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி விரல்நுனிகளில் வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப் பெரிதும் உதவிய உதவிப்பொதுமுகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர் மற்றும் இவ் வங்கியின் சிறப்பான செயற்பாட்டுக்கு உதவி வரும் முகாமையாளர், வங்கி உத்தியோகத்தர்கள் அனைவரையும் பாராட்டி இவ்வங்கியின் சேவைகள் மேன்மேலும் உன்னதமடைய மகிழ்வு டன் வாழ்த்துகிறேன்.

இ.வரதீஸ்வரன்,
பிரதேச செயலர், பருத்தித்துறை.

We Welcome
VISA
VISA Electron
MasterCard
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation




இலங்கை வங்கி
நெல்லியடிக் கிளையின்
தன்னியக்க சேவை
BOC
நாடளாவிய இலங்கை வங்கியின் தன்னியக்க பணிப்பரிமாற்று இயந்திர (ATM) சேவையுடன் இணைத்துக்கொள்ளும்
ஆரம்பவிழா - 23.10.2008 வியாழக்கிழமை

## குறுகிய காலத்தில் அளப்பரிய சேவையாற்றிய வங்கி



2007 ஆம் ஆண்டு மார்கழி 24 ஆம் நாள் இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை கணனிமயப்படுத்தப்பட்டு சர்வதேச வலைப்பின்னலுடன் இணைத்துக்கொள்ளப்பட்ட தினத்தன்று வாடிக்கையாளர்கள் சார்பாக நெல்லியடிக் கிளைக்கு தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் (ATM) மூலம் பணம் பெறும் வசதி செய்து தரப்படவேண்டும் என்றும், மேற்தரக் கிளையாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் என்னால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளில் ஒன்றான ATM மூலம் பணம் பெறும் வசதி இன்று முதல் ஆரம் பிக்கப்படவிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். விரைவில் மேற்தரக் கிளையாக நெல்லியடி தரம் உயர்த்தப்ப டும் எனவும் நம்புகிறோம்.

குறுகிய காலத்தினுள் இலங்கை வங்கி வாடிக்கையாளருக்கு அளப்பரிய சேவை யை செய்து வருகின்றது என்பது மிகையாகாது. வர்த்தகம், விவசாயம், சிறு கைத்தொழில் போன்றவற்றை ஊக்குவிப்பதோடு நிதி உதவியும் செய்து பொருளாதார மீட்சிக்கு வழி சமைப்பதுடன், கிராமங்களையும் பொருளாதார வளமாக்கும் பா ரிய பணியையும் செய்து வருவது பாராட்டக் கூடியது. நெல்லியடிக் கிளையும் சர்வதேசமயப்படுத்தப்படுவதையிட்டு வாடிக்கையாளராகிய நாம் மகிழ்ச்சி அடைவதுடன், இச்சந்தர்ப்பத்தில் நெல்லியடி இலங்கை வங்கிக்கிளையின் முகாமையாளர், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவரதும் அன்பானதும் அரவணைப்புமான சேவையையும் பாராட்டி, விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

மு.சுந்தரலிங்கம் J.P.,
சதாபொன்ஸ், அல்வாய்.

வாழ்த்தும்
வாடிக்கையாளர்கள்

செல்லமுத்தாஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி,
நெல்லியடி.

தங்கம்ஸன்
நெல்லியடி,
கரவெட்டி.

நெல்லை சில்க்ஸ்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

சிதம்பரப்பிள்ளை
புத்தகசாலை
பிரதான வீதி, நெல்லியடி.

விண்மீன்
அங்காடி
பிரதான வீதி, நெல்லியடி.

சதாபொன்ஸ்
பிரதான வீதி, மாலுசந்தி,
அல்வாய்.

ஜெயசெந்தினி
நகைமாடம்
பிரதான வீதி, நெல்லியடி.

## மேலும் உயர்க!



வடமராட்சி மண் உலகப் புகழ் பெற்றது என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். காலத்தால் மறக்க முடியாத, பெருமை பெற்றபல கல்விமான்களைத் தந்த மண் இது. இந்த மண்ணின் இதயம் போன்றது நெல் லியடி. வடமராட்சியில் இலங்கை வங்கி முதலில் காலடி பதித்தது இந்த மண்ணின் தலை போன்ற பருத்தித்துறையில் - ஆக தலையிலு இதயத்தி லும் இலங்கை வங்கி கால் ஊன்றி உன்னத சேவை யாற்றிக் கொண்டு வருகிறது.

இந்த உன்னத சேவைக்கு மேலும் மெருகூட்டத் தானியங்கிக் பணப்பரிமாற்ற இயந்திரம் இன்று முதல் நெல்லியடிக்கிளையின் முத்திரையாக செயற்படப் போகிறது.

கிளையின் வளர்ச்சி மிகவும் அபாரமானது ... பதை பின்னோக்கிப் பார்த்தால் தெரியும். சென்ற வருடம் இக்கிளை 'ஏ' தரத்துக்கு தரம் உயர்த்தப்பட்டது. விவசாயக் கடன் மற்றும் சுயதொழில் கடன் வழங்கலிலும் மீளப் பெறுவதிலும் சாதனை படைத்தது. இன்று இங்குள்ள முகாமையாளர் யாழ். மாவட்ட வங்கிக் கிளைகளைக் கணனிமயமாக்குவதிலும் தானியங்கிப் பணப்பரிமாற்ற இய... பொருத்துவதிலும் ஓர் ஆணிவேராக இ...

இவரின் நிர்வாகத்தின் கீழ் இக்கிளை மேன்மேலும் தரம் உயர்த்தப்பட வேண்டும் எனவும், இங்கு பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களும் வாழ்வில் உயர வேண்டுமெனவும் மனமார வாழ்த்துகிறேன்.

நாம் இப்படி வளரக் காரணமாயிருந்த எமது உயிரினும் இனிய வாடிக்கையாளப் பெருமக்களும் மற்றும் சகல துறை சார்ந்தோரும் நெல்லியடிக் கிளையின் சேவைகளைப் பெற்று சமூகத்தில் சாதனை படைக்க வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

க.பாலசுப்பிரமணியம்,
முன்னாள் உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்).

## மேன்மேலும் வளர்ச்சி அடைக!



26ஆவது அகவையில் பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளரைத் தன்னகத்தே கொண்ட இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை இன்று (23.10.2008) ATM இயந்திர செயற்பாட்டினையும் உலகளாவிய ரீதியில் வலைப்பின்னலுடன் இணைத்துக் கொள்வதையுமிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது வடமராட்சிப் பிரதேச மக்களின் வங்கிச் சேவையை மிகவும்தொழில்நுட்பம் வாய்ந்த, வேகமாகச் செயற்படக்கூடிய ICBS செயற்பாட்டினை ஆரம்பித்து 12 மாதங்களுக்குள் அதிநவீன ATM இயந்திர செயற்பாட்டினையும் மக்களுக்கு வழங்கி தனது சேவையை உலகளாவிய ரீதியில் முதலாவது வங்கி என்ற குறிக்கோளை எட்டியுள்ள இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை மேன்மேலும் வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி.வே.குலநாயகம்,
செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

## காலத்தின் தேவைக்கேற்ற மக்கள் சேவை



இலங்கை வங்கி நெல்லியடிக்கிளையில் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் வசதி (ATM) அறிமுகமாகி நடைமுறைக்கு வருவதையிட்டு வடமராட்சிப் பிரதேச மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவர். தேசத்தின் வங்கி எனப் போற்றப்படும். இலங்கை வங்கியின் நெல்லியடிக்கிளை மிகவும் காத்திரமான சேவை வழங்குகின்ற வரலாற்றைக் கொண்டதாகும். இயங்குதிறன் கொண்ட நவீன நகரமாக வளர்ந்து வருகின்ற நெல்லியடியின் முன்னணி வங்கியாக வடமராட்சி மக்களால் மதிக்கப்படும் இலங்கை வங்கியில் காலத்தின் தேவைக்கேற்றாற் போல் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் வசதி (ATM) ஏற்படுத்தப்படும் நன்னாளை இப்பிரதேச மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். இது இன்று கைகூடியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இவ் வங்கியின் மக்கள் சேவை பூரணமாவதற்கு இச் சேவை வலுச் சேர்க்கும். இலங்கை வங்கியின் மக்கள் சேவை வளம் பெற்றுச் செழித்தோங்க எமது நல் வாழ்த்துக்கள்,

திரு.செ.சேதுராஜா, அதிபர்,
யா/நெல்லியடி ம.ம.வி.

திருநடனமுருகன்
மெடிக்கல்
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
நெல்லியடி.

குணா
ஸ்ரோர்ஸ்
நெல்லியடி.

நியூ கிருஷ்ணா
கிறீம் வராஸ்
கொடிகாமம் றோட்,
நெல்லியடி.

அருண் அழகுமாடம்
அருண் புடைவையகம்
பிரதான வீதி,
நெல்லியடி.

Vadamaradchy
Steno Club
Vathiry,
Karaveddy

Dora Multy
Complex
Nelliady,
Karaveddy.

விநாயகர்
களஞ்சியம்
பிரதான வீதி, நெல்லியடி.


முத்துமாரி
ஸ்ரோஸ்
பெரியதம்பி கடை, அல்வாய்.

கே.ஜெயக்குமார்
மோட்டார் வாகன
விற்பனையாளர்
திருமகள் சோதி வீதி, நெல்லியடி.

மகாலட்சுமி
பல்பொருள் வாணிபம்
உச்சில் அம்மன் கோவிலடி,
கரணவாய் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் கல்விக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனை கல்லூரி அதிபர் அருட்திரு கே.ஜேம்ஸ் சிங்கராயர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அழைத்து வருவதை முதல் படத்திலும், கல்விப் பணிப்பாளர் நாடாவை வெட்டிக் கண்காட்சியைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், மாணவர்களின் காட்சி அலகு ஒன்றையும், மாணவிகள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

## அயடீன் இல்லாத உப்பு சுகாதாரப் பகுதியால் பறிமுதல்

யாழ்ப்பாணம்,ஒக்.23

சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட மண்டான் பகுதியில் அள்ளப்பட்ட மூன்று மூடை உப்பு சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

அயடீன் இல்லாததாலும் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாலும் மண்டான் பகுதியில் அள்ளப்பட்ட உப்பு வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், பொது மக்கள் இந்த உப்பினை உணவுக்கு பயன்படுத்த வேண்டாமெனவும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(1-207)

## சிசு உதான அலகு திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.23

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் 'சிசு உதான' அலகினை' இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கவுள்ளது. வித்தியாலய அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச முகாமையாளர் ஹென்றி மேற்படி அலகினைத் திறந்து வைப்பார்.

(201)

# சிறுவர்களைப் பெற்றோருடன் இணைக்கும் திட்டத்துக்கு அவர்களின் பொருளாதாரம் தடையாக உள்ளது

## யாழ்.மேலதிக அரச அதிபர் கவலை

நல்லூர், ஒக்.23

சிறுவர் இல்லங்களில் வாழும் பிள்ளைகளைப் பெற்றோருடன் இணைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்குப் பெற்றோர் ஆதரவாக உள்ளபோதும் பொருளாதாரக் கஷ்டம் காரணமாக அவர்களைப் பாதுகாக்க முடியுமா என்று கவலையடைகின்றனர். இதுவே தடையாக உள்ள து.

இவ்வாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி குறிப்பிட்டார். .

வேலணை பிரதேச செயலகச் சிறுவர், முதி யோர்தின விழா கடந்த திங்கட்கிழமை வேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில்பேசிய மேலதிக அரச அதிபர் சிவசுவாமி மேலும் கூறியவை வருமாறு:

பெற்றோர்களின் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகவே தமது பிள்ளைகளைத் தம்முடன் இணைத்துக் கொள்வது குறித்து கவலை கொள்ளுகிறார்கள். சுய தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இதனை ஓரளவு நிவர்த்திக்கக் கூடியதாக இருக்கும்.

இன்று சிறுவர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவற்றில் கல்வி முக்கியமானது. அனேக பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் உரிமையை இழந்து காணப்படுகிறார்கள்.

சமூகத்தில் ஏற்படக் கூடிய பின்னடைவுகளுக்கு கல்வியில் காட்டாத அக்கறை காரணமாகிறது. ஒரு சிறந்த கல்வியுடையவனால் சமூகத்திற்கு உயர்ந்து வழிகாட்ட முடியும்.

### சிறுவர்களின் நலன்பேண குழுக்கள் அமைப்பு

சிறுவர்களின் நலன்களைக் கவனிக்க வென மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டத்தில் சிறுவர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பெற்றோர்கள் உரியவர்களை அணுகவேண்டும். சிறுவர்களுக்குக் கட்டாயக்கல்வி தேவை. சிறுவர்கள் பாடசாலை செல்வதில் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு கவனமாக உள்ளது.

முதியவர்களைப் பொறுத்தவரை இன்று கூடுதலான அளவில் தனித்துவாழ்பவர்களாகவே காணப்படுகிறார்கள். சிறந்த ஆற்றலும் அனுபவமும் கொண்ட அவர்களிடமிருந்து இளந்தலைமுறை தூர நிற்பதற்காகத் தெரிகின்றது.

இளைய தலைமுறை பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ள எமது முதியவர்களுடன் அன்பு செலுத்தி, அவர்களது அனுபவ அறிவுகளை உள்வாங்கி தமது கல்வியுடன் அவைகளையும் இணைத்து செயற்படும்போது ஒரு சிறப்பான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை உணர வேண்டும் - என்றார்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராதா கிருஷ்ணன் பேசும்போது கூறியவை வருமாறு:

சிறுவர்களுக்குத் தன்னம்பிக்கை தேவை. அதை ஊட்ட வேண்டிய பொறுப்பு முதியவர்களிடம் உள்ளது. இருசாராரும் ஒருவர் மீது ஒருவர் அன்பும் பாசமும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சிறுவர்கள் நாளைய தலைவர்கள்; முதியவர்கள் அனுபவஸ்தர்கள்.

எமது சிறார்கள் கல்வியில் நாட்ட முடையவர்களாக இருத்தல் வேண்டும். தீவகத்தில் உள்ள பிள்ளைகளுக்கு இப்போது கல்வியில் விழிப்புணர்வு ஏற்படுகிறது. தீவகத்தில் இருந்து யாழ்.நகர் சென்ற பிள்ளைகள்தான் அங்குள்ள பாடசாலைகளில் கல்வியில் முன்னிலை வகிக்கிறார்கள்.

எமது பிள்ளைகள் முயன்றால், பெற்றோர்கள் அவர்களுக்கு உற்சாகமளித்தால் இப்பகுதியில் உள்ள பிள்ளைகளும் முன்னேற முடியும். நகரப்பகுதியில் இருந்தால் மட்டும்தான் உயரலாம் என்ற எண்ணம் கூடாது. கல்வி வளர்ச்சிக்காக இங்கு அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (202-111)

## நல்லூர் செயலக சிறுவர் தின நிகழ்வு

நல்லூர்,ஒக்.23

நல்லூர் பிரதேச செயலக சிறுவர்கள் இணைந்து நடத்தும் சிறுவர் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக சிறுவர் சபைத் தலைவர் கே.சசிக்கா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் கலந்து கொள்வர்.

சிறுவர்களது கலை நிகழ்வுகள், கோட்டமட்டப்போட்டிகள், சிறுவர் கழக கட்டுரைப் போட்டிகள் என்பவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

(202-111)

## ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்தினர் மந்துவில் கிராமத்தில் நலத்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிறுவனத்தினர் மந்துவில் கிராமத்தில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

ஜே/345, ஜே/346, ஜே/347 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 106 பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிக் கடன்களை வழங்கியுள்ளனர். மேலும் 53 பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிக் கடன் வழங்கியுள்ளனர்.

இப்பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் புத்தகப்பைகளையும் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

மழை காலம் ஆரம்பித்ததையடுத்து பிரிவு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.தவசிரோஜனுடன் இணைந்து கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு குளோரின் இடப்படுவதாகவும் தெரிவிக் கப்பட்டது.

(202-207)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டச் செய்கை

யாழ்ப்பாணம்,ஒக்.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் செயற்பாட்டினை பிரதேச கமநல சேவைகள் நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

விவசாய போதனாசிரியர்கள் அனைத்து இடங்களுக்கும் நேரடியாகச் சென்று வீட்டுத் தோட்டத்தினை மேற்கொள்வதற்கான உள்ளீடுகள், விவசாயப் பொருள்கள், உரவகைகள், பீடைநாசினிகள் போன்றவற்றை விநியோகிப்பதுடன் ஆலோசனைகளையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேட்டு நிலப் பயிர்களான கத்தரி, வெண்டி, பயறு, சணல், கௌபி, கச்சான் உள்ளிட்ட உள்ளீடுகள் வழங்கி வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தார்.

(202-207)


STUDY IN SINGAPORE

மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு



- கணனித்துறை, சட்டத்துறைகளில் பட்டதாரியாகலாம்.
- ஒருவருடக் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் U.K, கனடா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கல்வியைத் தொடர வாய்ப்புண்டு.
- படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- 100% உத்தரவாதத்துடன் VISA
- பாதுகாப்பான தங்குமிட வசதிகள்
- மேலும் உங்களுக்கு தேவையான சகல கற்கை நெறிகளையும் எம்மால் பெற்றுத்தரப்படும்.

மாணவர்களே உங்கள் விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்.

தொடர்புகளுக்கு: 131/1, HILL STREET,
DEHIWALA.
0774540215
(Send SMS Monday - Friday. 8.00a.m - 6 p.m or Call after 6 p.m)
சிங்கப்பூர் தொடர்புகளுக்கு: - 006590595217
E-mail:-shakthi31@rocketmail.com
பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை E-mail செய்யவும்.



10ஆவது பிறந்தின வாழ்த்தும் பாராட்டி வாழ்த்தும்



"சரஸ்வதி வாசம்"
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 114 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/நல்லூர் ஆனந்தா வித்தியாசாலை மாணவன்

செல்வன் த.நிராஜா

அவர்களை அவரின் பிறந்த தினமான இன்று கல்வியில் மேலும் சாதனைகள் பெற்று நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் அருள்பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(79392) திரு.வே.பிள்ளையான் குடும்பம்.



திருமண வாழ்த்தும் 29ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



புத்தூர் மேற்கு, நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட *N.*சந்திரமோகன் *(சந்திரன்)* இன்று (23.10.2008) வியாழக்கிழமை திருமண பந்தத்தில் இணைந்து ஓராண்டு நிறைவு நாளையும் 29ஆவது பிறந்த நாளையும் டோகாவில் (கட்டார்) வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவரை சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல அச்சுவேலி உளவிக்குளம் சித்தி விநாயகர் அருள்பெற்று பல்லாண்டு காலம் சந்தோஷமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ச.கிரிஷாந்தினி *(மனைவி)*,
சி.தர்சா *(மைத்துனி)*

அச்சுவேலி வடக்கு,
புத்தத்தோப்பு ஒழுங்கை.

(79259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்கு என்ன பதில்? - 7

**அனுப்பியவர்: தே.லக்ஸ்மன்**



ஒருநாள் மரநாய் ஒன்று மரத்தில் உள்ள பறவைகளைப் பிடித்து உண்பதற்காக மரத்தில் ஏறியது.

அந்த மரத்தில் காகம், கிளி, மைனா, சிட் டுக்குருவிகள் என நாலு விதமான பறவைகளில் மொத்தமாக 100 பறவைகள் இருந்தன.

மரநாய் மரத்தில் ஏறுவதைக் கண்ட காகம் கரையத் தொடங்கியவுடன் மற்றைய பறவைகளும் விழித்துகொண்டன.

இதைக் கண்ட மரநாய் காகத்தைப் பார்த்து "ஏன் கத்துகிறாய்? பயப் படவேண்டாம். உங்களில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?" எனக் கேட்டது. "நாங்கள் சிட்டுக் குருவிகளை விட 2 பேர் அதிகம்" என்று காகம் சொன்னது. அப்போது கூட்டில் இருந்து எட்டிப் பார்த்த கிளியை நோக்கி மரநாய் "நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்கு அந்தக் கிளியோ "நாங்கள் மைனாக்களை விட 2 பேர் அதிகம்" என்றது. அந்த நேரத்தில் சிட்டுக் குருவி "கீச்" என்று கத்தியது. சிட்டுக்குருவியிடம் மரநாய் எச்சில் ஊறியபடி "நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர் கள்?" என்று கேட்க, "நாங்கள் கிளிகளை விட 2 பேர் அதிகம்" என்றது சிட்டுக் குருவி. இதைக் கேட்டுகுழம்பிய மரநாய் மரத்தை விட்டு இறங்கி ஓடிவிட்டது.

அந்த மரங்களில் இருந்த மொத்தப் பறவைகளில் காகங்கள் எத்தனை? கிளிகள் எத்தனை? மைனாக்கள் எத்தனை? சிட்டுக்குருவிகள் எத்தனை? சொல்லுங்கள் பார்க்கலாம்.

*(சரியான விடையை 26.10.2008 இற்கு முன்னர் எழுதி அனுப்புங்கள்)*

# மற்றவர்களிடத்தே குறைகளைத் தேடாதீர்!

மனிதர்களை அல்லது மனித மனங்களைப் படிக்காதவர்களும் இச்சமுதாயத்தில் வாழ்கின்றனர்;வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் எந்தக் காரியத்தினை எடுத்துக்கொண்டார்களானாலும் அதில் ஆயிரமாயிரம் குறைகளைக் காண்பவர்களாகவே இருப்பார்கள். எந்தவகையிலும் அவர்களைத் திருப்தி செய்யமுடியாமல் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் எல்லாம் எனக்கு ஒரு வனுக்கே அல்லது ஒருத் திக்கே தெரியும் என நினைக்கும் பூரண குறைகுடங்களை ஒத்தவர்கள். இதனால் கிடைக்கும் விளைவு தம்மைத் தாமே தோல்வியின் வாயிலுக்குக் கொண்டு செல்வதாகும். ஒருவரது குறைகளை ஒப்புவிப்பதாயின் அதை திருத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் நீதியான, நியாயமான முறையில் எடுத்துக்கூற வேண்டும். அதை விட்டுவிட்டு அடிக்கடி சகல விடயங்களிலும் குறை காண்பவர் ஒரு விதத்திலே மனநோயாளியாகக் காணப்படுவார். பூமி யிலே உள்ள அனைத்துச் சமுதாயத்தையும் உற்றுப் பார்ப்போமானால் பலவகையான மக்கள் வாழ்கிறார்கள். எனவே எல்லா விதத்திலும் பூரணமான மனிதர்கள் இவர்கள்தான் எனச் சுட்டிக்காட்ட முடியாது. புனைபெயர் கொண்டு பேசுதல், மனம் வலிக்கின்ற அளவு கீழ்த்தரமாகப் பேசுதல், பொது இடத்தில் வைத்து அசிங்கமாக வர்ணித்தல், இல்லாததை இருப்பதாக கூறிக் கதைகட்டுதல், ஒருவருடைய உறவு முறையை அவர்களுக்கு முன்னால் தவறாகப் பேசி மன வேதனையை தருதல் - இவையெல்லாமே ஒருவகை மனநோயாகவே இருக்கிறது. மனதில் தைரியம் உள்ளவர்கள் மற்றவர்களைப்பற்றி சிந்திக்கத் தேவைப்படுவது சமுதாய நன்மைக்காகவே அல்லாமல் வேறெதற்கும் இல்லை. அவ்வாறானவர்கள் மற்றவர்களுக்கு ஒருநாளும் மனவலியைத் தரமாட்டார்கள் - மனத்தூய்மையுடன் வாழ்பவர்கள் மற்றவர்களின் குறைகளைத் தேடி தமது மனத்தூய்மைகளை இழக்கமாட்டார்கள். நீங்களும் மற்றவர்களின் குறைகளை தேட வேண்டுமென நினைக்கிறீர்களா? அதேபோல் எவரும் செய்யும் செயலில் குறைகளை நினைக்கிறீர்களா!? உடனே கருணையும் மனிதாபிமானத்தையும் வரவழையுங்கள். அதுவன்றி தேவையற்ற விமர்சனம் செய்வதன் மூலம் மனத்தூய்மையைப் பேணமுடியாது.

**சு.பாத்திமா நபீஷா (பானு)**

## கேள்விக்கு என்ன பதில்? - 6இன் விடை

| | | |
|---|---|---|
| 1. ஆண்கள் 3 பேர் | (4x3) | =12 அப்பங்கள் |
| 2. பெண்கள் 15 பேர் | (15x½) | = 7½ அப்பங்கள் |
| 3. குழந்தைகள் 2 பேர் | (2x¼) | = ½ அப்பம் |
| மொத்தம் | | = 20 அப்பங்கள் |

**கேள்விக்கு என்ன பதில்? - 6 இற்கு சரியான விடையை அனுப்பிய நூற்றுக்கணக்கான வாசகர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு, பாராட்டுப் பெறுபவர்கள்:**

1. கதிர்காமநாதன் நிரஞ்சன் - 8A, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
2. ப.கிருஷிகன் - வழக்கம்பரை, சுழிபுரம்.
3. நாகரெத்தினம் கஜரூபன் - வேலணை -08.
4. ஜே.தனுஷன் - கதிற்றல் வீதி; யாழ்ப்பாணம்.
5. செ.வைஸ்ணவன் - மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
6. அன்ரன் அனுசா - சென்.சாள்ஸ் ம.வி.
7. க.யஸ்மின் - பெரியவிளான், இளவாலை.
8. மா.பத்மரமா - வட்டுக்கோட்டை.
9. இ.ஞானசம்பந்தன் - அளவெட்டி.
10. எஸ்.ஸ்ரீயுகன் - 7D, யா/மத்திய கல்லூரி.
11. ப.சுதாகரன் - களபூமி, காரைநகர்.
12. சி.பாலசுந்தரம் - கல்வளை, சண்டிலிப்பாய்.
13. சிவாகரன் தேவராசா - டச்சு வீதி, சுன்னாகம்.
14. என்.ஜே.இரத்தினதயா - ஏழாலை.
15. ஹம்ஷா பாஸ்கரஐயர் - யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலை.
16. ஏ.கபிர்த்தன் - யாழ்.மத்திய கல்லூரி.
17. தே.தனோஜன் - யாழ்.இந்துக் கல்லூரி.
18. பொ.நாகலிங்கம் - சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.
19. பூ.கப்ரன் றொசான் - 11E, சென்.ஜோன்ஸ் கல்லூரி.
20. எஸ்.பி.சுகிவன் - குமரகோட்டம், கோண்டாவில்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்* **'இளவல்கள் வட்டம்'** *என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.......................................
முகவரி :-.......................................
:-.......................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## அகதித் தடிசைகள்

யாருமே!
எங்களை
தேடாத போதும்
காற்று,
மழை,
வெயில்
இவைகள்
எம்மை
ஆரத்தழுவி
நித்தமும்
நலம்
விசாரித்தபடியே........

**எஸ்.கவிதரன், சண்டிலிப்பாய்.**



## மூன்றெழுத்து வார்த்தைகளும் மூன்று நிமிடமும்

உயிர் என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
உண்மை என்னும் மூன்றெழுத்து வார்த்தை
உண்மை என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
உறவு என்னும் மூன்றெழுத்து வார்த்தை
உறவு என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
அன்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தை
அன்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
நட்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தை
நட்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
காதல் என்னும் மூன்றெழுத்து வார்த்தை
காதல் என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
கற்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தை
கற்பு என்னும் மூன்றெழுத்து வார்த்தைக்குள்
பிள்ளை என்னும் மூன்றெழுத்து வார்த்தை
இவ்வாறு மூன்றெழுத்து வார்த்தை, மூன்றெழுத்து வார்த்தை எனக்கூறி முந்நூறு வார்த்தை கூறலாம்.
ஆனால் மூன்று நிமிடம் நீ யோசித்தால்
விண்வெளி கூடச் செல்லலாம்.
யோசிப்பாயா மானிடா? யோசி! மூன்று
நிமிடம் அல்ல முந்நூறு நிமிடம் வரை.

**சி.அன்ரனி சயந்தன், தரம் -10, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## பிரிவு

*நட்பு என்பது வாழ்வில் உண்மையானால்*
*பிரிவு என்பதும் உலக நியதியாயிற்றே*
*சோகங்கள் ஆயிரமாயிரம் வந்தாலும்*
*பிரிவச் சுமை மனதில் என்றும் மறையாது*
*பிரிவுகள் நட்பாகும் வசந்தம் போல வேரில்லை*
*கல்விக்காய் இணைந்த இனிய நட்புகள்*
*கல்விக்காகவே பிரிவதை மனம் மறுக்கிறது*
*நட்புகள் எல்லாம் மனதைத் தொடுவதில்லை*
*மனதினில் ஆழமாகிவிட்ட நட்புகள் பிரிவுகளில்*
*அதன் வலி மனதினில் மறைய மறுக்கிறது*

**மிதிலா விக்னேஸ்வரன், உயர்தரப்பிரிவு (2010), யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.**

# பிள்ளைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்வானதாக்குவோம்




*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

செவிசாய்த்தல்என்பது உண்மையிலேயே உடலும் உளமும் ஒருங்கிணைந்து செய்யவேண்டிய ஒன்று. இதற்கமைவாக நோக்குவோமேயானால் இன்று சில பெற்றோர்கள் பிள்ளைகளின் கருத்தைச் சரியாகக் காதுகொடுத்துக் கேட்பதற்குப் பதிலாக தமது பகட்டான வாழ்வுக்கு எப்படி இப்பிள்ளைகளைப் பலி கடாக்களாக்கலாம் என்பதையே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சிந்தித்துக்கொண்டு இருக்கின்றனர். இதனால் கருத்தூன்றிச் செவிசாய்க்கத் தவறுகின்றனர். உண்மையிலேயே பிள்ளைகள் தாம் சொல்ல விரும்புவதையெல்லாம் தம் வார்த்தைகளில் முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. செய்கைகள், பெருமூச்சுகள், மௌனம் போன்ற பல்வேறு குறியீட்டு வடிவங்களில் வெளிப்படுத்துகின்றனர். எனவே இங்கு செவிசாய்த்தல் வெறும் வாய்மொழியை மட்டும் செவிமடுத்தலாக அல்லாது உணர்வுகளால் செவிமடுக்க பெற்றோர் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சில பெற்றோர்கள் தமது குரலை தாம் அதிகம் இரசிப்பதில் மனமகிழ்வடைகின்றனர். இதனால்தான் பிள்ளைகளின் கருத்துகளை செவிமடுப்பதைவிட தாம் அதிகம் பேசிக் கொண்டிருப்பதை விரும்புவர். இவர்கள் இரண்டு காதும் ஒரு வாயும் தமக்கு உண்டு என்பதை மறந்துவிட்டார்கள். மேலும், பெரியவர்கள் பிள்ளைகளுக்குச் செவிசாய்க்கும்போது உண்மைகளை [Facts] அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கொள் ளாமல் பேசுபவருடைய கருத்தை (Idea) புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், வார்த்தையை விடச் சொல்பவரின் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை ஆள்மனதில் நிறுத்தி செவிசாய்த்து கொள்வது, மகிழ்வான பிள்ளைகளின் வாழ்வுக்கு ஏற்புடையதாக அமையும்.

பொதுவாக மூன்று வகையான செவி சாய்த்தல்களைப் பெற்றோர்களிடம் காண்கின்றோம். ஒன்று செவிசாய்த்தல் போல் நடிப்பது. இரண்டாவது, குறிப்பிட்ட சில செய்திகளை மட்டும் ஆர்வத்துடன் செவிசாய்ப்பது. இறுதியாக உண்மையிலேயே ஆர்வமாகக் கருத்தூன்றிச் செவிமடுப்பது என்பன அவை. இதில் மூன்றாவது வகையான செவிமடுத்தலே பிள்ளையின் உண்மையான மேம்பாட்டுக்கு உதவுவதாகவும் அவர்களை மகிழ்விக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தும் என்றால் மிகையாகாது.

பிள்ளைப் பருவம் என்பது தேடல்கள் நிறைந்த ஒரு பருவம். பிள்ளைகளுக்கு வாழ்வியல் அர்த்தங்களை விளக்கும் செயற்பாடுகளைப் பெற்றோரே ஊக்குவிக்கவேண்டும்.

எனவே பிள்ளைகள் மீது அன்பையும் ஆர்வத்தையும் பெற்றோர் வெளிப்படுத்தி, அந்தப் பிஞ்சு மனங்களின் ஆசைகள், பிரச்சினைகள் என்பவற்றைச் செவிமடுத்துக் கேட்க வேண்டும். அதன் பின்னர் செவிசாய்த்த விடயம் தொடர்பான தமது அக்கறையை வெளிப்படுத்தி, முன்மாதிரியாகப் பெற்றோர் நடக்க வேண்டும்.

பிள்ளைகளின் சொல், செயல் என்பவற்றிற்குத் தவறான முற்சாய்வு எண்ணத்தைக் கொள்ளாமல், தமது பிள்ளைகளின் திறமையான செயற்பாடுகளோடு ஒப்பிடாமல் நடக்கவேண்டும்.

ஏனெனில் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித்துவம் வாய்ந்தவர்கள். தமது பிரச்சினையைத் தாமே சமாளிக்கும் வல்லமையையும் நம்பிக்கையையும் அவர்களுக்கு அளிப்பதே பெற்றோரின் கடமை.

எனவே பிள்ளைகள் மீது தேவையற்ற - குறைகாணும் - நடவடிக்கைகளைத் தவிர்த்து, அவர்களது குறைநிறைகளை ஏற்கும் மனப்பக்குவம் பெற்றோருக்கு வரவேண்டும். பிள்ளைகளின் கருத்துகளுக்குச் செவிசாய்த்து வாழ்வில் அவர்கள் எதிர்நீச்சல் போட்டு வெற்றிபெற, ஒவ்வொரு பெற்றோரும் முயற்சிக்கவேண்டும். அப்போதுதான் சிறார்களின் உலகம் மகிழ்வானதாக மாறும்.

*[முற்றும்]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.றோட்டரிக்கழகம் தொழிற்றுறைத் திணைக்களத்துடன் இணைந்து விஞ்ஞான நுட்பத் தையல் பயிற்சி ஒன்றை அண்மையில் பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தியது. இந்தப் பயிற்சியில் 22 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

தொழிற்றுறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் ப.ராகவனின் வழிப்படுத்தலுடன் மாவட்ட அலுவலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செல்வி ஞா.துகாரதி, பருத்தித்துறை பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செல்வி என்.ஆனந்தி ஆகியோர் இப்பயிற்சி நெறிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர். நிகழ்வில் றோட்டேரியன் சிவரூபன் உரையாற்றுவதையும் மேடையில் றோட்டேரியன் ரவிஹரன், மாவட்ட அலுவலர் ராகவன், றோட்றிக் கழகத் தலைவர் றோட்டேரியன் எஸ்.பாலசுப்பிரமணியம், றோட்டேரியன் நீலா தர்மகுலசிங்கம், றோட்டேரியன் சுரேந்திரன், திட்ட உதவியாளர் செல்வி துகாரதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

பயிற்சி நெறியில் ஈடுபட்டுள்ள பயனாளிகளை இரண்டாவது படத்தில் காணலாம். (203)

## தமிழ் உப தபால் அதிபர்கள் சங்க புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஒக்.23

அகில இலங்கை தமிழ்பேசும் உபதபால் அதிபர்களின் 43 ஆவது தொழிற்சங்க பொதுக் கூட்டம் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைவராக எஸ்.சுப்பிரமணியம், உப தலைவர்களாக பூ.சிவகுமார், த.வசந்தகுமாரி, செயலாளராக எஸ்.ரி.நந்தகுமார், பொருளாளராக கே.மாலினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டடுள்ளனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவு நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பிரதி உப அஞ்சல் அதிபர் ப.குமரகுரு, பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரத்தினம், நிர்வாக அலுவலர் எஸ்.புஸ்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(201-29)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
கந்தையா
சிறிரங்கநாதன்

தாய்மடி: 12.03.1965
இறையடி: 13.11.2007
திதி: 23.10.2008

தந்தையே தினமும் உங்கள் சிந்தையே!
எம்மைத் தாங்கும் மரமாய்
அதில் சுற்றும் கொடி நாம்
ஆயிரம் உறவு இருப்பினும்
அப்பா உங்கள் அன்பை தேடுதே!
ஆண்டு ஒன்றாகியும்
ஆறாத நினைவுடன்...

மனைவி,
பிள்ளைகள்:
கம்சியா, நிசந்தன்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (79329)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14 . 06 . 1926
விண்ணில்
04 . 11 . 2007



### திருமதி அன்னம்மா செல்லத்துரை

திதி: நவமி (23.10.2008)

பத்துத் திங்கள் எனைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தெடுத்தாய்
அன்பால் எமை அணைத்து
அறிவுரைகள் சொன்னதெல்லாம்
இன்றுபோல் இருக்குதம்மா!
ஏங்கித் தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
செ.செல்வராசா (மகன்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

நெல் ஒரு பாதி பிள்ளையார்
கோயில் அருகாமை,
தாவடி தெற்கு,
கோக்குவில். (79339)

## சமய சந்நிதிகளில்

யாழ்.திருவண்ணை- கன்னாதிட்டி அருள்மிகு காளியம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூசைகள் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

விரத்தின் இறுதி நாளான எதிர்வரும் 28ஆம் திகதி செய்வாய்க்கிழமை காப்புக் கட்டும் நிகழ்வு மேற்படி ஆலயத்தில் இடம் பெறும். (201)

★ ★ ★

வண்ணை, ஒக்.23

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் பல்வேறு சமய நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை தீபாவளி நிகழ்வுகளும், செவ்வாய்க்கிழமை கேதார கௌரி விரத பூசையும், புதன்கிழமை கந்த சஷ்டி விரத பூசை ஆரம்பமும் நடைபெறவுள்ளன.

மேற்படி மூன்று தினங்களிலும் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசைகளும் ஆரம்பமாகும்.

முற்பகல் 9 மணிக்கு சமயச் சொற்பொழிவுகளை அடுத்து முற்பகல்10 மணிக்கு வசந்த மண்ட பப் பூசைகள் நடைபெறும்.

இறுதியாக ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி ஸ்ரீதேவி சமேதராக வீதியுலா எழுந்தருள்வார். (202-167)

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் சம்பளப் பட்டியிலில் கையொப்பமிட்டு வங்கியூடாக கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(201)

## நூல் வெளியீட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.23

கலாநிதி க.இரகுநாதன் எழுதிய ''தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும்'' என்ற நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை மண்டபத்தில் நடைபெறும்.

அரசறிவியல் ஒன்றியத் தலைவர் சி.நிமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டுரையை அரசறிவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் ஆ.வே.மாணிக்கவாசகரும் ஆய்வுரையை ஊடக வள நிலைய இயக்குநர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் வழங்கவுள்ளனர். (201)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.23

கு.சுதாகரன் எழுதிய 'இலங்கை வரலாறு' வினாவிடை நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய பிரதி அதிபர் திருமதி யு.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் விழாவில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் மேற்படி நூலை வெளியிட்டு வைப்பார். நூலின் முதற்பிரதியை வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி பெற்றுக் கொள்வார்.

வெளியீட்டுரையை ஆசிரியர் அ.மனோகரனும், வரவேற்புரையை ஆசிரியர் ச.கரு[illegible] (201-250)

## குருநகரில் கலைவிழா நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.23

குருநகரில் கலைவிழாவை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மார்கழி மாதத்தில் வரும் யேசுக்கிறிஸ்துவின் பிறப்பை ஒட்டிய ஒளிவிழாவாகவும் இந்தவிழா அமைய உள்ளது.


குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணிச் சங்கம் இவ்விழாவைச் சிறப்பிக்க மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் மத்தியில் கட்டுரை, பேச்சு,கவிதை, குழு மற்றும் தனி நடனம், மறைக் கல்வி, நாட்டுக்கூத்துப் பாடல் ஆகிய போட்டிகளையும் நடத்தவுள்ளது.

மேற்படி போட்டிகளில் குருநகர் பிரதேச எல்லைக்குட்பட்ட அனைவரும் பங்கு கொள்ளலாம். கலை மூலம் சமூக, கலாசார சீரழிவுகளை சீர்ப்படுத்தல் என்ற நோக்குடனேயே மேற்படி போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அடுத்த மாதம் 27ஆம் திகதிக்கு முன்னதாக சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணிக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

(202-160)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லத்துரை
பாலச்சந்திரன்

தோற்றம்: 10.04.1960
மறைவு: 04.11.2007
திதி: தசமி


எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களைத் தவிக்கவிட்டு எங்கு
சென்றீர்கள் தவியாய் தவிக்கும் எங்களை
மீட்க ஒரு முறை வரமாட்டீர்களா?

A.V.றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். (79398)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19 . 08 . 1935
உதிர்வு
23 . 09 . 2008



### திருமதி கந்தையா பார்வதிப்பிள்ளை

திதி: 23.10.2008

மாதமொன்று சென்றதம்மா
வாடுகின்றோம் உம் நினைவால்
தேடுகின்றோமம்மா ஓடி வருவாயம்மா
என்று காண்போம் உங்கள் திருமுகத்தை
ஆண்டுகள் பல சென்றாலும்
மாறாதம்மா உங்கள் நினைவலைகள்.

இன்று (23.10.2008) வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

தகவல்:
க.கணபதிப்பிள்ளை (மகன்), மக்கள் வங்கி, சாவகச்சேரி.

(79407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000ஆம் ஆண்டில் சந்திரிகா இந்தியாவிடம் உதவி கோரலாம் தமிழக அரசு ஈழத்தமிழரை காப்பாற்றுமாறு கேட்கக் கூடாதா?

## இராமேஸ்வரத்தில் சிவாஜிலிங்கம் எம்.பி பேட்டி

இராமேஸ்வரம், ஒக்.23



இலங்கை இந்தியாவின் மாநிலம் இல்லை. இது உள்நாட்டுப் பிரச்சினை. இதில் இந்தியா தலையிடுவது நியாய மில்லை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்.

அப்படியானால், 2000 ஆம் ஆண்டில் யாழ்.குடாநாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இலங்கை இராணுவத்தின் முகாமைக்கைப்பற்ற முயற்சி எடுத்த போது- 40,000 படைவீரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிந்த போது- அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் பதவியில் இருந்த வாஜ்பாய் அரசிடம் உதவி கோரியது நியாயமா? சந்திரிகா இந்தியாவிடம் உதவி கோரியதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு கேட்கிறார் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

கடந்த திங்கட்கிழமை இராமேஸ்வரம் வந்த சிவாஜிலிங்கம் செய்தியாளருக்கு பேட்டி அளித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தமது பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:

ஈழத் தமிழர்களை இலங்கை இராணுவம் அரக்கத்தனமாக - மூர்க்கத்தனமாக - காட்டுமிராண்டித்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் படுகொலை செய்வதைக் கண்டித்து தமிழகத்தில் புயலெனப் பொங்கி எழுந்துள்ள எதிர்ப்பு அலை, சிங்கள அரசுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையில் சிங்கள அரசால் ஈழத் தமிழர்கள் அரக்கத்தனமாகப் படுகொலை செய்யப்படுகின்றமை தொடர் கதையாகி வருகிறது. இந்தப் படுகொலைக்கு எதிராக தமிழகத்தில் அனைத்துக்கட்சிகள் மட்டுமல்லாது பல்வேறு அமைப்புகளும் குரல் கொடுத்து வருகின்றன.

இவ்வளவு குரல் கொடுத்தும் இலங்கை அரசு கொஞ்சம் கூடச் செவிசாய்க்காமல் தொடர்ந்து தமிழர்களைப் படுகொலை செய்து வருகிறது. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தைரியத்தாலேயே இலங்கை அரசு இவ்வாறு செயற்படுகிறது. எனவே, இந்திய அரசு இதற்கு ஒரு முடிவு கட்ட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் உள்ள மக்களுக்கு உணவு, மருந்து ஆகியவற்றை அனுப்பி வைத்து ஐ.நா. சபையின் மேற்பார்வையில் அனைவருக்கும் கிடைக்கச்செய்ய வேண்டும். தற்போது தமிழகத்தில் எழுந்துள்ள இந்த எதிர்ப்பு அலை மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு அதிர்ச்சியையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது. ஆனால் மத்திய அரசினுடைய எச்சரிக்கை மிகவும் முக்கியம்.

### இந்தியா அந்த வார்த்தையைக் கூறினாலே....

புலிகளின் மீதான தடையை நீக்க ஆலோசனை நடத்துவோம் என இந்திய அரசு கூறினாலே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக டில்லிக்கு வந்து இதற்கு முடிவு கட்ட நடவடிக்கை எடுப்பார்.

இலங்கையில் கதிர்காமம், அம்பாந்தோட்டைப் பகுதியில் ரூ.11 கோடி செலவில் சீனாவின் உதவியுடன் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது. இது அமைக்கப்பட்டால் ஈரானிலிருந்து சீனாவுக்கு எண்ணை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் அந்த வழியாகச் செல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு இடையூறாக அமையும். இது போன்று இந்தியாவின் எதிர்ப்பு நாடுகளிடம் உறவு வைத்துள்ள இலங்கையிடம் இந்திய அரசு கவனமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் நடக்கும் போரில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதத்தைக் கூறாமல் விடுதலைப் புலிகளைக் கொன்றமை குறித்த செய்திக்கே அங்கு முக் கியத்துவம் கொடுக்கிறார்கள். பேச்சு மூலம்தான் இலங்கையில் போரை நிறுத்த முடியுமே தவிர எந்த ஒரு கால கட்டத்திலும் இலங்கை அரசால் புலிகளைத் தோற்கடிக்க முடியாது.

தமிழ் ஈழம் கிடைத்தால் தமிழக மீனவர்களுக்கு உயிர்ப்பலியே ஏற்படாது. இதற்கு உடனடியாகத் தீர்வு காண இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(அ)

## சிறுவர்களின் ஆரோக்கியத்துக்கு ஆன்மீகம் இன்றியமையாததாகும்

யாழ்ப்பாணம், ஒக்.24

சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்திற்கு ஆன்மீகம் மிக அவசியமாகும். சிறுவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக ஆன்மிக உணர்வு ஊட்டப்படவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய சிறுவர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:

சிறுவர்களுக்குப் பொருத்தமான இத்தினத்தில் இப்பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்க இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் முன்னெடுத்திருக்கும் பணி மிகச் சிறந்தது. வடமராட்சிப் பிரதேசத்தில் பல பாடசாலைகளிலும் செயல்படுத்தப் பட்டுவந்த இந்தப்பணி தென்மராட்சிப் பிரதேசமக்களுக்கும் பயன்படும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு ஆன்மீக உணர்வை ஊட்டி அவர்களை நல்ல பிரஜைக ளாக்க வேண்டும். யேசுபெருமானை சிலுவையில் அறையும் பொழுது தன்னை இம்சித்தவர்களை மன்னிக்கும்படி பரமபிதா கேட்டார் என அறிகிறோம்.

முன்னைய காலங்களில் நம்மிடையே சித்தர்கள், ஞானிகள் வாழ்ந்து வழிகாட்டினார்கள். இன்றைய காலத்தில் இளைய சமுதாயத்தினர் ஒருவரையும் மதியாது வாழ்வது நமது துர்ப்பாக்கியமாகும்.

சிந்தனைத்திறன் அற்ற இளைஞர்கள் உலகில் அதர்மச் செயல்களைப் புரிகின்றனர். இவர்களை இறைவன்தான் நல்வழிப் படுத்த வேண்டும் - என்றார்.

சுவாமி சித்ரூபானந்தா, பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசிகரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (202-236)

## வேலணை மேற்கு ஆலயத்துக்கு நிதியுதவி

மானிப்பாய்,ஒக்.23

வேலணை மேற்கு - அம்பிகைநகர் மகேஷ்வரி அம்மன் ஆலயத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆலய புனரமைப்புக்கான நிதியுதவியை மேற்படி ஆலயத்திற்கு வழங்கியுள்ளார்.

(202-95)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற மயில்வாகனம் சுவாமிகளின் குரு பூசை நிகழ்வின் பின்னர் அன்னதானம் வழங்கப்பட்டது. பக்தர்கள் உணவருந்துவதைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

## யாழ்., வலிகாமம் வலய பாடசாலைகளுக்கென சிமெந்து ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்ப்பாணம், மற்றும் வலிகாமம் ஆகிய வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளின் நிர்மாண வேலைகளிற்கென ஒரு பகுதி சிமெந்து மாவட்ட செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிமெந்து கோரி விண்ணப்பித்த பாடசாலைகள் உடனடியாக பாடசாலை வேலைகள் பகுதியுடன் தொடர்பு கொண்டு சிமெந்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை வேலைகள் பொறியியலாளர் கூறியுள்ளார். (201)

## ஓய்வூதியர் ஒருவருக்கு 'கலைஞாயிறு' பட்டம்

மானிப்பாய்,ஒக்.23

ஆனைக்கோட்டை - உயரப்புலத்தை சேர்ந்த ஓய்வூதியர் அ.யேசுரட்ணம் 'கலைஞாயிறு' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு சமூக சேவை அமைப்புக்களில் தலைவர், செயலாளர் ஆகிய பதவிகளை வகித்துச் சேவையாற்றியமைக்கே யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷால் 'கலைஞாயிறு' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (202-95)

# வாசகர் திருமுகம்

## நூலகத்தின் அவலம் பாரீர்! கவனிப்பார்களா அதிகாரிகள்?

சுமார் அரைநூற்றாண்டுக்கு முன் தனியாரால் ஸ்தாபிக்கப்பட்ட 'அதிகார் செல்லமுத்து நூலகம்' பின் பட்டினசபையால் பொறுப்பேற்கப்பட்டு தற்போது வலி.தென்மேற்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இதன் சுவர்கள் ஆங்காங்கே வெடித்தும் கூரைகள் ஆங்கங்கே இறங்கியும் விழுந்துவிடும் நிலையில் உள்ளன. சென்றவாரம் நூலகம் இயங்கிக் கொண்டிருக்கும் போதே கூரையின் 'லெவல் சீற்' கழன்று பெரும் சத்தத்துடன் நிலத்தில் வீழ்ந்து அங்கு நூலகத்தை பாவித்துக் கொண்டிருந்தவர்களை அதிர்ச்சியுற வைத்தது.

கூரை இறுக்கம் காரணமாக மழைநீர் பல இடங்களில் நூலகத்தினுள் இறங்குகின்றது. குறிப்பாக முன்பக்க சுவர் மூலம் வடிந்துவரும் நீர் நூலக மண்டபத்தினுள் தேங்கி நின்று வாசகர்களுக்கும், ஊழியர்களுக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. நூலக ஊழியர்கள் இந்நீரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாயுள்ளது.

நூலக கட்டிடத்தின் பராமரிப்பு வேலைகள் உரிய காலங்களில் மேற்கொள்ளப்படாமையே இன்றைய நிலைக்குக் காரணமாகும். சென்ற 3,4 வருடங்களாக இதுபற்றி நூலக ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு நிர்வாகத்தினால் பல உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. ஆயினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உடுவில், இணுவில், சங்கானை போன்ற அயல் கிராமங்களிலுள்ள நூலகங்கள் எவ்வளவோ வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கும்போது எமது நூலகம் மட்டும் 50 வருடங்களுக்கு முந்திய நிலையில் இருப்பது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது. உரிய நிர்வாகத்தினர் இந்த நூலகத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

வே.த.இரத்தினசிங்கம் *(ச.நீ)*
*மானிப்பாய்.*

## மாடி 'கிளினி'க்குகளை இடம் மாற்றி வைப்பார்களா?

19.09.2008 உதயன் பத்திரிகையில் 'எல்லா வைத்திய நிபுணர்களும் இவர்களைப் பின்பற்றினால் வைத்தியசாலை சொர்க்கபூமியாகும்' என்ற தலைப்பின்கீழ் வாசகர் திருமுகத்தில் ஒரு அன்பர் நல்ல செய்தியை எழுதியிருந்தார். நன்றி.

எனது சகோதரி நீரிழிவு நோயாளி. 2006ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் காலில் சத்திர சிகிச்சை செய்து 2½ மாதங்கள் 23ஆம் வார்ட்டில் தங்கி நல்ல அன்போடு பராமரிக்கப்பட்டு வந்தார். வைத்திய நிபுணர், வைத்தியர்கள், தாதிமார்கள் நன்கு கவனித்து சிகிச்சையளித்தார்கள். சில நாள்கள் 2ஆம் வார்ட்டிலும் சிகிச்சையளிக்கப்பட்டது. அங்கும் 23ஆம் வார்ட் போலவே நன்கு கவனித்து சிகிச்சையளித்தார்கள். நன்றி.

ஆனால் அவரால் தொடர்ந்து 'கிளினிக்'குக்கு செல்ல முடிவதில்லை. 2 வருடத்தில் பலத்த சிரமத்தின் மத்தியில் 2 தடவைதான் மாடியிலுள்ள 'கிளினிக்'குக்கு செல்லமுடிந்தது. காரணம்:- அவரால் ஓர் ஆளின் உதவியுடனும் மாடி ஏறுவது கஷ்டம். பலவீனமானவர். இவரைப் போல் இயலாத பலரை அங்கே கண்டு கவலையுறுவேன். மாடியில் கிளினிக் வைக்காமல் கீழே எங்காவது வைக்க ஆஸ்பத்திரி நிர்வாகம் ஒழுங்கு செய்தால் பல நோயாளர்களுக்கு பேருதவியாக இருக்கும். இந்தச் சிரமத்தை யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் தீர்க்க உதயன் பத்திரிகை உதவினால் நோயாளிகளுக்கு மிகவும் நன்மை கிடைக்கும். மாடி ஏறும் சிரமத்தால் பல நோயாளிகள் கிளினிக் போய் ஆலோசனை பெறமுடியாமல் மிகவும் வேதனைப்படுகிறார்கள்.

*அம்பனை.* சி.வசுமதி.

## மின்சாரம் வழங்கலில் அரியாலை புறக்கணிப்பு

யாழ்ப்பாணத்தின் பிரபல்யம் வாய்ந்த நகரங்களில் அரியாலையும் ஒன்றாகும். இதன் பரப்பளவு பற்றி நாம் கூற முற்படவில்லை. ஆயினும் யாழ்.மாநகராட்சி மன்றத்தின் 4 வட்டாரங்கள் இதில் அடங்கும். மக்கள் இங்கு கல்வி கேள்விகளில் தலைசிறந்து விளங்குகின்றனர்.

ஆனால் யாழ்ப்பாணத்துடன் தொடர்புகள் எல்லாம் இருந்தபோதும் மின்சாரசபையினர் நாம் யாழ்நகரோடு சேராதவர்கள் என்ற முறையில் நடப்பது எமக்கு வேதனை தருகிறது. அரியாலைப் பிரதேசத்துக்கு கைதடியுடன் மின்சாரத் தொடர்பினை ஏற்படுத்தித் தந்த காரணத்தால் அரியாலையை யாழ்ப்பாணத்திலிருந்து பிரித்து விட்டனர். மின்சாரம் வழங்கும்போது அரியாலையைப் புறந்தள்ளி மற்றேனைய பிரதேசங்களுக்கு அதனை வழங்கும் மின்சாரசபை இப்பிரதேசத்துக்கு மட்டும் பி.ப 6.40 மணியளவில் இருந்து 9.20 வரை மின்சாரத் தடையை ஏற்படுத்துகிறது.

இதற்கு முன்னர் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டபோது 7.40 க்கு வரும் மின்தடை 9 க்குப் பின்னர் சிலவேளைகளில் 9.45 மணிவரையும் இழுபடும்.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்து மக்கள், மாணவர்கள் படிக்கத் தொடங்குமுன் மின்சாரம் போனால் அவர்கள் தூங்கிய பின்னர் தான் அது திரும்ப வரும். இதற்கு ஒரு முடிவு காண விரும்பிய அவ்வூர் மக்கள் பல வழிகளிலும் முயற்சி செய்து ஓரளவு சீருக்கு கொண்டு வந்தனர்.

ஏன் கைதடியுடன் எம்மை இணைக்க வேண்டும்? எம்மை யாழ்ப்பாணத்துடன் இணைத்து மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கக் கூடாதா?

*அரியாலை.* கா.பிதாம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் மீண்டும் களைகட்டத் தொடங்கியுள்ள கலை விழாக்கள்

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக பல ஆலயங்களின் உற்சவ காலங்களில் முன்னர் பெரும் திருவிழாக்கள் நடந்தேறின. மேடைகள் அமைக்கப்பட்டு மாலை தொடக்கம் அதிகாலை வரை பல நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கம். இதனைப் பார்வையிட பொதுமக்கள் நித்திரையைக் கலைத்து காத்திருப்பார்கள். அவ்வாறான நிகழ்வுகள் இன்றைய இளம் சமூகத்திற்கு புதியன.




இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களிலும் இசை நிகழ்வுகள், நடன நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் இன்று நேற்றல்ல, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்பாக சங்கீத ஞானத்தில் அதி சிறந்த- பல வித்துவான்கள் ஒன்று சேர்ந்து இசையரங்குகளை அந்த நாள்களில் நடத்தினர். முக்கியமாக இசை ஆசிரியர்களான காலஞ்சென்ற குமாரசாமி ஆசிரியர், காலஞ்சென்ற நடேசன் ஆசிரியர், திருமதி பூமணி இராசரத்தினம் ஆசிரியர் என்போரும் தற்பொழுது இசையை வளர்த்துவரும் ஏரம்பமூர்த்தி ஆசிரியர், பொன்.ஸ்ரீ வாம தேவன் உள்ளிட்ட பல சங்கீத ஆசிரியர்கள் இசை விழாக்களை நடத்தினர்.

இந்த நிகழ்வுகள் ஆரம்ப காலங்களில் மீசாலை, வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடந்தேறின. நீளமான அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் மாலை வேளைகளில் வெவ்வேறு ஞாபகார்த்த பெயர்களைக் கொண்ட இசையரங்குகளில் நடத்தப்பட்டன. அந்த நிகழ்வுகளில் பாட்டு, வயலின் இசை, நாதஸ்வர நிகழ்வுகள் நடந்தேறின.

அவை பிற்பட்ட காலங்களில் எமது பகுதியில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் மறைந்து செயலற்றுப் போய்விட்டன.

ஆனால்நீண்ட இடைவெளிக்குப் பின்னால் தற்பொழுது மீண்டும் இசை நிகழ்வுகளை மாதாந்தம் நடத்த தென்மராட்சியின் நலன் விரும்பிகள் இசை ஆசிரியர்கள் முன்வந்துள்ளனர். இந்த நிகழ்வுகள் தற்பொழுது சாவகச்சேரி நகரில் சிவன் கோயில் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சிக் கலை மன்றத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்வுகளை ஒருங்கமைத்து தென்மராட்சிப் பதிவாளர் க.மோகனராஜலிங்கம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




### மக்களைக் கவர்ந்த நிகழ்வுகள்

கடந்த வாரம் மீசாலை "சுபாலயம்" நடனப்பள்ளி மாணவர்களது கலைவிழாவும் நூல் வெளியீட்டு நிகழ்வும் தென்மராட்சி கலைமன்றத்தில் பதிவாளர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றன. அந்த நிகழ்வுகளை கண்டு மகிழ என்றுமில்லாதவாறு கலை மன்றம் மக்கள் கூட்டத்தால் நிறைந்து வழிந்தது. நிகழ்வில் பரதகலா வித்தகர் திருமதி சுபாதினி தயாபரனின் நெறியாள்கையில் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வுகளில் காவடி நடனம், சுளகு நடனம், கும்மி, கோலாட்டம், தனி நடனம், கையிலைக் காட்சி நடனம் என்பன சிறப்பாக ரசிகர்களை கவர்ந்திருந்தன.

"சுபாலயம்" ஆசிரியர் பரத கலாவித்தகர் திருமதி சுபாதினி தயாபரனால் தொகுத்து எழுதப்பட்ட 'பரதநாட்டியம்' வினா விடைக் குறிப்புப் புத்தகமும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். புத்தகத்தினை நூலாசிரியர் சுபாதினியிடமிருந்து கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பெற்று வெளியிட்டு வைக்க சாவகச்சேரி வர்த்தக வங்கி முகாமையாளர் பெற்றுக்கொண்டார். இந் நூலின் வெளியிட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சுகந்தினி நிகழ்த்த, நூலின் அறிமுகவுரையை யாழ். பல்கலைகக் கழக முன்னாள் நடனத்துறைத் தலைவர் சிவசுவாமி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், இசையாசிரியர்கள் மிகப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

த.அருணன்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 14 . 04 . 1943



மறைவு 23 . 09 . 2008

### அமரர் சேதுபதி கருணாகரன்

கடந்த (23.09.2008) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமக்கு உற்றதுணையாக நின்று பல வழிகளிலும் உதவியோருக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (23.10.2008) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

இல.82, சீனிவாசகம் வீதி,
கோட்டடி, யாழ்ப்பாணம். (79418)

குடும்பத்தினர்.

---

## வீதி சேதம்

யாழ்ப்பாணம், ஒக்.23

வரணி படை முகாமுக்கு முன்பாக உள்ள பொது மக்கள் பயன்படுத்தும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ் வீதியில் மழை நீர் தேங்கியுள்ளதால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

---

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் இல.31, கதிரேசு வீதி, வைரவபுளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவப் பிரகாசம் (20.10.2008) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை- நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- சேதுநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான துரைராஜா (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்), பொன்னம்மா, செல்லத்துரை மற்றும் சரஸ்வதி, அன்னபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற ஸ்ரீபாலகணேஷமூர்த்தி மற்றும் திரிபுவனேஸ்வரி, திலகவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.10.2008) வியாழக்கிழமை அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் 9 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.17/27, இரண்டாவது ஒழுங்கை,
பிரதிவிம்பாராம வீதி, தொ.பே.: 0771962026,
களுபோவில. 0773596519, 0776621479.

தகவல்:
திருமதி சி.சிவபாக்கியம்
(மனைவி)

(79411)

---

## வீதி அபிவிருத்தித் திணைக்களம்

# கேள்வி அறிவித்தல்

வடமாகாண் வீதி அபிவிருத்தித் திணைக்களம் சார்பாக பிராந்திய கேள்விச் சபைத் தலைவரினால் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடம் இருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01. | மாவெலி- பெரியதுறை வீதி திருத்தம் (0.0-6.0 கி.மீ.)- நெடுந்தீவு | M-7 | 500.00 | 10,000.00 |
| 02. | சாராப்பிட்டி வீதி புனரமைப்பு (1.00-2.00 கி.மீ.)- நெடுந்தீவு | M-7 | 500.00 | 20,000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகார்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றின் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. (ICTAD) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப் பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண் டும்.

V. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் மு.ப. 8.30இல் இருந்து பி.ப.4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பொற்றுக்கொள்ள முடியும்.

VI. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 23.10.2008 முதல் 05.11.2008 வரை வேலை நாள்களில் முற்பகல் 9 மணியில் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

VII. அந்தந்த வேலைக்குரிய பொறி வைத்த கேள்விகள் தலைவர், பிராந்திய கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு 06.11.2008 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும்நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

VIII. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பேற்கமாட்டார்.

எந்திரி சி.பு.சிவநேசன்,
தலைவர் பிராந்திய கேள்விச்சபை.

(சி/555652)

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
657/1, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டு 27 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

நல்லூர், ஒக்.23

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 3 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கும் வேறு பொது அபிவிருத்திப் பணிகளுக்கும் என 27 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மதில் கட்டுமான வேலைகளுக்கென அரசு 8 லட்சம் ரூபாவும் மக்கள் பங்களிப்பாக ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் -

அரியாலை மகேஸ்வரி வித்தியாலயத்திற்கு அரசு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மக்கள் பங்களிப்பாக 60 ஆயிரம் ரூபாவும்-

கோண்டாவில் ஆர்.சி.ரி எம்.எஸ். பாடசாலை மதில் கட்டுமானத்துக்கு அரசு 6 லட்சம் ரூபாவும் பொதுமக்கள் பங்களிப்பாக ஒரு லட்சம் ரூபாவும் - ஒதுக்கப்பட்டுள் ளது.

கொக்குவில் வராகி சனசமூக நிலையத்திற்கு குழாய்க்கிணறு, பொதுக்கிணறு புனரமைப்புக்கு அரசு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், மக்கள் பங்களிப்பாக 40 ஆயிரம் ரூபாவும், எம்.எஸ்.வீதி, குமாரசாமி மண்டபம், புகையிரத நிலைய வீதி சிறிய வாய்க்கால் ஆகியவற்றின் புனரமைப்புஅரச 2 லட்சம் ரூபாவும், பொதுமக்கள் பங்களிப்பாக 2 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-111)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 வருட அபிவிருத்தித் திட்டம்

மானிப்பாய், ஒக்.23

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மூன்று வருட அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

2009-2011 காலப்பகுதியினை உள்ளடக்கியதான மூன்றுவருட அபிவிருத்தித் திட்டத்திற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து முன்னுரிமைப் பிரகாரம் அனுப்பி வைக்குமாறு அரச திணைக்களங்களைக் கேட்டுள்ளார்.

விவசாயம், கைத்தொழில், உல்லாச பிரயாணம், வர்த்தகம், மனித குடியேற்றம், பொருளாதார உட்கட்டுமானம், போக்குவரத்து, சமூக உட்கட்டுமானம், நிர்வாகம் ஆகிய தலைப்புகளின் கீழ் திட்ட முன்வரைபுகளைத் தயாரித்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட திட்டமிடல் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

விவரங்கள் வன்-மென் பிரதிகளாகத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். திட்ட வரைபுகள் தயாரிப்பதற்கென படிவமும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (202-95)

## புற்றுநோயாளர்களுக்கு பால்மா அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் 40 நோயாளர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பால்மா வகைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு பலியான சிறிய தாயாரின் நினைவாக மீசாலை மேற்கு, கேணியடியைச் சேர்ந்த குடும்பத்தினரால் பால்மாப் பொதிகள் வழங்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டது. (202-207)

## வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட 21 பேரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

1987ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தால் யாழ்.போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட 21 பேரின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலை 'எக்ஸ்ரே' மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஈ.ஞானசோதி, நிர்வாக உத்தியோகத்தர் பி.பத்மநாதன் உட்படப் பலர் நினைவுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் வைத்தியசாலைப் பணியாளர்கள், பலியானவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (202-78)

## சண்டிலிப்பாய் விவசாயிகளுக்கு யூரியா, அடிக்கட்டுப் பசளைகள்

மானிப்பாய், ஒக்.23

சண்டிலிப்பாய் கமநலகேந்திர நிலையம் ஊடாக பெரும்போக நெல்விதைப்பிற்கென யூரியா மற்றும் அடிக்கட்டு பசளைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை பசளை பெறாத விவசாயிகள் அலுவலக நேரத்தில் மானிய உரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஸ்ணன் கேட்டுள்ளார்.

நிக்கொட் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு முதல் உரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து விவசாயிகள் சம்மேளனங்களும் முழுநன்மை அடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். (202-95)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் மனைப்பொருளியலில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

# குடாநாட்டில் 24 மணித்தியாலத்தில் 66.9 மில்லிமீற்றர் மழை பதிவு

நல்லூர், ஒக்.23

குடாநாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் 66.9 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்தது.

கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் நேற்று புதன்கிழமை வரை குடாநாட்டில் 190.9 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் கிடைக்கவேண்டிய சராசரி மழை வீழ்ச்சி 242.8 மில்லி மீற்றர் மழை எனவும், செப்ரெம்பர் மாதத்தில் 63.3 மில்லி மீற்றர் மழை பெய்ய வேண்டிய போதிலும் எனினும் 2.2 மில்லி மீற்றர் மழையே கிடைத்ததாகவும் வானிலை ஆய்வு மையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தற்போதைய சீரற்ற காலநிலைக்கு வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதியின் குழப்ப நிலை காரணம். அடுத்த சில தினங்கள் வரை இது தொடரும் எனவும் நாட்டில் பரவலாக மழை இடம்பெறும் எனவும் - தெரிவித்தார். (202-111)

## கடும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

சுன்னாகம், ஒக்.23

சுன்னாகம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையின் காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இம்மழையினால் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்கள் பெரிதும் சிர மங்களை அனுபவிக்கின்றனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை - நெல் விதைப்பு தாமதமடைந்த நிலையில் பருவம் தவறிய மழையின் காரணமாக முளைத்த பயிர்கள் அழிவடையும்நிலை ஏற்பட்டிருப்பதாக சில விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (202-38)


# நிரந்தர நியமனம் பெற்றுத்தருமாறு மக்கள் வங்கி ஊழியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுத் தருமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விஷேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 4 வருட காலத்திற்கு மேலாக யாழ்.மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் அலுவலக உதவியாளர்களாகவும், தட்டெழுத்தாளர்களாகவும், கணனி தரவுப் பதிவாளர்களாகவும் பல்வேறு நிலைகளில் பெரு எண்ணிக்கையானோர் பணிபுரிந்து வருகின்றனர். அந்த ஊழியர்களின் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் முடிவுக்கு வரவுள்ளன என தெரிவிக்கப்படுவதாக அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊழியர்களது கோரிக்கை தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி விரைவில் நியாயமானதொரு தீர்வு வழங்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் என அமைச்சு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (203)




# சமூக முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும்

### யாழ். அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக்.23

சமூக முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். அதன் மூலமே பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் உயர்வு பெறும். இதற்கு மீள்எழுச்சித்திட்ட கிராம அபிவிருத்தி அமைப்புகள் பரந்த அளவில் செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார்.

மீள்எழுச்சித்திட்டத்தின் கீழ், யாழ்.மாவட்டத்தில் 5000 குடும்பங்களைக் கொண்ட 23 மையக் கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு இலங்கை வங்கியில் வங்கிக் கணக்கு திறந்து கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மீள்எழுச்சித் திட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் தலைமையில் கடந்தவாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கிராம மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மீள்எழுச்சித்திட்ட கிராம அபிவிருத்தி அமைப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்படாமல் பரந்த அளவில் செயற்பட வேண்டும்.

குளங்களை மாத்திரம் கட்டுவதால் பயன் இல்லை. மக்களுடைய வாழ்வாதாரத்தை முன் னேற்றும்படியாக அவர்களை விரைந்து விவசாயம் செய்யத் தூண்டவும் வேண்டும்.



வங்கி மக்களிடம் நம்பிக்கையுடன் பணத்தைக் கொடுக்கிறது. அந்த நம்பிக்கையை மேலும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு கிராம மட்ட அபிவிருத்தி அமைப்புகள் ஆர்வத்துடனும், விசுவாசத்துடனும் செயற்பட வேண்டும். இதற்கு சமூக வலுவூட்டாளர்கள் சமூகத்துக்கு வலுவூட்ட வேண்டும் - என்றார். (202-49)



கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனைச்சபையின் 'சிவநெறி' நூல்வெளியீட்டு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், கரவெட் டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நூலை வெளியிட்டுவைக்க உள்ளூர் சைவப் பெரியார் ஒருவர் பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்காக ஆயுதம் ஏந்தத் தயார்!

## இலங்கையில் 'தமிழீழம்' எப்போதோ மலர்ந்திருக்கும் அதைத் தடுத்தது இந்தியாதான் என்கின்றார் வைகோ



ஈழத் தமிழருக்காக ஆயுதம் ஏந்திப் போராடவும் தயாராகவுள்ளோம். அவர்களுக்காக உயிரையும் கொடுப்போம்.

பிரபாகரன் தலைமையில் தமிழ் ஈழம் மலரும் என்ற நம்பிக்கையுடன் ஈழத் தமிழர்கள் இருக்கின்றனர். புலிகள் வேறு; தமிழர்கள் வேறு அல்லர். நாங்கள் வன்முறை மீது காதல் கொண்டவர்கள் அல்லர்: இலங்கையில் எப்போதோ தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும். அதைத் தடுத்தது இந்தியாதான்.

- இவ்வாறு தமிழகத்தின் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவரும், ஈழத் தமிழர் ஆதரவாளரும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோதெரிவித்துள்ளார்.

''ஈழத்தில் நடப்பது என்ன?'' என்ற தலைப்பில் ம.தி.மு.க. சார்பில் கருத்தரங்கக் கூட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில், புலிகள் ஆதரவு வீடியோக் காட்சிகள், இரண்டு மணிநேரம் ஒளிபரப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே வைகோ இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு:-

பிரபாகரன் தலைமையில் தமிழ் ஈழம் மலரும் என்ற நம்பிக்கையுடன் இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றனர். புலிகள் வேறு; தமிழர்கள் வேறு அல்ல. நாங்கள் வன்முறை மீது காதல் கொண்டவர்கள் அல்ல. எது வன்முறை, எது உரிமை என்று பிரித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய போது, அதற்கு ஆதரவு அளித்தனர். புலிகள் துப்பாக்கி ஏந்தினால் தவறு என்கின்றனர். ''இலங்கைக்கு இராணுவ உதவி செய்யமாட்டேன்'' என்று பிரதமர் எனக்கு அளித்த வாக்குறுதியை நம்பினேன்; அவர் ஏமாற்றிவிட்டார்.

புலிகளின் ஆயுதக் கப்பல்களை இந்திய இராணுவம் தகர்த்தது. கடற் புலிகளை அழிக்க இந்திய இராணுவம் தகவல் கொடுத்து உதவியது. நான்கு ஆண்டுகளாகப் புலிகளை அழிக்க, இந்தியா திட்டமிட்டு இராணுவ உதவி செய்துள்ளது. இலங்கையின் இனப்படுகொலைக்கு இந்திய இராணுவம் உதவுகிறது. இந்திய அரசின் துரோகத்திற்கு என்ன தண்டனை? இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு இந்தியா ஏன் ஆயுத உதவி செய்கிறது? தமிழன் சிந்திய ஒவ்வொரு சொட்டு ரத்தத்திற்கும், ஒவ்வொரு தமிழனின் சாவுக்கும் மத்திய அரசும், அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் பொறுப்பு.

மத்திய அரசு செய்த துரோகத்தை எப்படி மன்னிக்க முடியும்? இலங்கையில் எப்போதோ தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும். அதைத் தடுத்தது இந்தியாதான். வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, தமிழர்களுக்கு எதிராக ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை.

இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்க, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைத்து விடாதீர்கள். இந்தியா, புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும். துன்பியல் நிகழ்வுகளைப் பற்றிப் பேசாதீர்கள். போரை நிறுத்துங்கள் உலகில் அனைத்து நாடுகளும் புலிகளுக்குத் தடைபோட, இந்திய அரசு தான் காரணம்.

ஈழத் தமிழர்களுக்காக ஆயுதம் ஏந்த வேண்டிய தேவை வந்தால், வைகோ முதல் ஆளாக களத்திற்கு வந்து நிற்பான். இதற்காக நாடு முழுவதும் இளைஞர்களைத் திரட்டுவேன். தமிழர்களுக்கு எதிராகத் துரோகம் செய்தால், அதற்கு தமிக மக்கள் தக்க தண்டனை தருவர்.

தமிழ் ஈழம் மலரும்; அதுவே எங்கள் தாகம்-என்றார்.

### தமிழ் ஈழம் மட்டுமல்ல; தனித் தமிழ்நாடும் மலரும்

''தமிழ் ஈழம் மட்டுமல்ல, தனித் தமிழ் நாடும் மலரும்'' என்று ம.தி.மு.க. அவைத் தலைவர் கண்ணப்பன் பேசினார். மேலும் -

புலிகளைப் பயங்கரவாதிகள் என்று தமிழ்த் துரோகிகள் சொல்கின்றனர். அகிம்சைப் போராட்டத்தில் வெற்றி பெறாததால்தான் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ் நாடு, தனிநாடு என்று சொல்லும் நாள் வந்தே தீரும்.

தமிழ் ஈழம் மட்டுமல்ல, தனித் தமிழ்நாடும் மலரும். இந்திய இறையாண்மையை பிரதமரும், முதல்வரும் காப்பாற்ற மாட்டார்கள். அனைத்துக் கட்சிகள் கூட்டத்தின் முடிவின்படி 29ஆம் திகதி ராஜிநாமாக் கடிதம் யார் கொடுக்கின்றனர் எனப் பார்க்கலாம். ''பிரதமர் நடவடிக்கை எடுத்துவிட்டதால், தி.மு.க., எம்.பிக்கள் ராஜிநாமாச் செய்யத் தேவையில்லை'' என்று கருணாநிதி அப்போது சொல்வார்.

இலங்கைக்கு அளித்துவரும் இராணுவ உதவியைத் திரும்பப் பெறவேண்டும். புலிகள் மீதான தடையை ரத்துச்செய்யவேண்டும். தனி ஈழத்திற்கு உரிய மரியாதையை தரவேண்டும் - என்றார்.

# உயர் நீதிமன்றில் நளினி மனுத்தாக்கல்

சென்னை, ஒக்.23

தம்மை விடுதலை செய்யக்கோரி ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளி நளினி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

17 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று ஏற்கனவே இவர் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

இவர் மீது கடுமையான குற்றச்சாட்டு இருப்பதாலும், சி.பி.ஐ. வழக்குத் தொடர்ந்ததாலும் விடுதலை செய்ய இயலாது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அரசு தரப்பு வாதத்தை ஏற்று, நளினி தாக்கல் செய்த மனுவை நீதிபதி நாகமுத்து தள்ளுபடி செய்தார். இதுதவிர, நளினி தாக்கல் செய்த இன்னொரு மனு மீது நீதிபதி தீர்ப்பு கூறுகையில், ''விதிமுறைப்படி ஆலோசனை கமிட்டியை கூட்டி, இவரது கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும்'' என்று தீர்ப்பு வழங்கினார்.

தள்ளுபடி செய்த மனுவை எதிர்த்து நளினி சென்னை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 17 ஆண்டுகளாகியும் ராஜிவ் கொலையில் நீதி கிடைக்கவில்லை என்கிறார் ராகுல்

ஸ்ரீநகர், ஒக்.23



எனது தந்தை ராஜிவ் காந்தி கொல்லப்பட்டு 17 ஆண்டுகளாகியும் இவ்வழக்கில் தமக்கு நீதி கிடைக்கவில்லை - என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி கவலை வெளியிட்டுள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, அங்குள்ள பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அப்போது, நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அப்சல் குரு இன்னும் தூக்கிலிடப்படாதமை ஏன் என்று ஒரு மாணவர் கேட்டார். அதற்குப் பதிலளித்து ராகுல் கூறியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

எனது தந்தை மனித வெடிகுண்டால் கொல்லப்பட்டார். இவ்வழக்கில் சிலருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், அவர்கள் இன்னும் தூக்கிலிடப்படவில்லை. என் தந்தை பிரதமராக இருந்தவர். எனது பாட்டியும் பிரதமராக இருந்தவர். ராஜிவ் கொல்லப்பட்டு 17 ஆண்டுகளாகியும் எனக்கு நீதி கிடைக்கவில்லை.

இதற்கு நமது மந்தமான சட்ட அமைப்பு தான் காரணம். எனது தந்தை கொலையில் தொடர்புடையவர்கள் ஏன் தூக்கில் போடப்படவில்லை என்று நான் முறைப்பாடு கூறவில்லை.

நீதித்துறையின் மீதும் சட்ட அமைப்பின் மீதும் நம்பிக்கை உள்ளது. எனக்கு நிச்சயம் நீதி கிடைக்கும். ஆனால், அதற்கு சிறிது காலம் எடுக்கும் - என்றார்.

# புலிகளை ஆதரிக்கும் கட்சிகளுடன் உறவில்லை எனக் காங். அறிவிப்பு

புதுடில்லி, ஒக்.23



இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் கட்சிகளுடன் காங்கிரஸ் எந்த உறவும் வைத்துக்கொள்ளாது - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு அறிவித்துள்ளார்.

டில்லியில், கடந்த திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், இலங்கையில் தமிழின மக்களுக்காக போராடி வரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தீவிரவாத அமைப்பு இல்லை என்றும், அவர்கள் விடுதலைப் போராளிகள் எனவும் கூறியிருந்தார்.

இதுதொடர்பாக, நேற்றுமுன்தினம் டில்லியில் கருத்துத் தெரிவித்தபோதே தங்கபாலு இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குக் காரணமான புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக திரையுலகினர் நடத்திய பொதுக் கூட்டத்தில் சிலர் விடுதலைப்புலிகளுக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்துப் பேசியுள்ளனர். இது கண்டிக்கத்தக்கதாகும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசும் யாருடனும், எந்தக் கட்சியுடனும் காங்கிரஸ் எந்த உறவும் வைத்துக்கொள்ளாது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சி தெளிவான நிலையைக் கொண்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக தி.மு.க. அழைப்பு விடுத்துள்ள மனிதச் சங்கிலி போராட்டத்தில் கலந்துகொள்வது குறித்து காங்கிரஸ் கட்சி எந்த முடிவும் செய்யவில்லை - என்றார்.

இந்தியச் செய்திகள்

# ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து நாளை அரச வைத்தியர்கள் கறுப்புப்பட்டிப் போராட்டம்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நாளை அரச வைத்தியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பணியாற்றுவார்கள் - என்று சமூக சமத்துவத்துக்கான வைத்தியர்கள் சங்கம் கூறியுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவ மாணவர்கள் நாளைய தினம் வகுப்புகளைப் புறக்கணித்து, கறுப்புப்பட்டி அணிந்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்றும் அது தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் பொதுச் செயலர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு-

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் மனிதச் சங்கிலியில் சென்னை மருத்துவக் கல்லூரி எதிரில் சமூக சமத்துவத்துக்கான வைத்தியர்கள் சங்கம் பங்கேற்கும்.

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுமூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி வகுப்புப் புறக்கணிப்பு, கறுப்புப்பட்டி அணிதல் ஆகியவை நடைபெறுகின்றன.

# ஈழத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக கருணாநிதி அரசு பதவி விலக வேண்டும்

## காங்கிரஸ் சி.ஞானசேகரன் வலியுறுத்தல்

வேலூர், ஒக். 22

தமிழகத்தில் ஆளுங்கட்சி உட்பட பல அமைப்புகள், சினிமா நடிகர்கள், இயக்குநர்கள், அனைத்துக் கட்சிக் கூட்டம், மனிதச் சங்கிலிப் போராட்டம், பொதுக்கூட்டம், பேரணி என்று நடத்தி புலிகளுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.

எனவே, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக கருணாநிதி அரசு பதவி விலகவேண்டும் - என்று காங்கிரஸின் வேலூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் சி.ஞானசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு-

ஈழத் தமிழர்கள் பாதுகாக்கப்படவும், அவர்கள் பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு கிட்ட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியினருக்கு முழு அக்கறை உண்டு. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்ற ராஜீவை மனித வெடிகுண்டு மூலம் கொன்றவர்கள் விடுதலைப் புலிகள்.

தமிழகத்தில் ஆளுங்கட்சி உட்பட பல அமைப்புகள், சினிமா நடிகர்கள், இயக்குநர்கள், அனைத்துக் கட்சி கூட்டம், மனிதச் சங்கிலிப் போராட்டம், பொதுக்கூட்டம், பேரணி என்று நடத்தி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.

காங்கிரஸ்காரர்களை கொச்சைப்படுத்தி, ராஜீவ்காந்தி கொலையை நியாயப்படுத்தி சிலர் வெளிப்படையாக பேசுகிறார்கள். தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை உண்மையான மறத்தமிழன் என்று புகழ்கிறார்கள். இதுகண்டு எங்கள் ரத்தம் கொதிக்கிறது. எம்.பிக்கள் ராஜிநாமா, மனிதச் சங்கிலி என்பதெல்லாம் விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்துக்கு உரம் சேர்க்குமேயொழிய, அரசியல் தீர்வுக்கு வழிவகுக்காது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழகத்தை வழிநடத்த வேண்டிய முதல்வர், பிரதமரிடம் எடுத்துச் சொல்லி அரசியல் தீர்வுக்கு வழிகாண்பதுதான் சாலச் சிறந்த முறை. அதைவிடுத்து அனைத்து எம்பிக்கள் ராஜிநாமா என்று மத்திய அரசை மிரட்டுவது அழகல்ல. பதவி துறக்க வேண்டும் என்பது தான் லட்சியம் என்றால் அமைச்சரவை ராஜிநாமா செய்திருக்க வேண்டும். ஆறு மாதங்களில் காலாவதியாக உள்ள எம்.பி. பதவி ராஜிநாமா என்பது கேலிக் கூத்தாகிவிடும்.

இராமேஸ்வரத்தில் பேசிய சினிமா இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் ராஜீவ் காந்தியை கொச்சைப்படுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு புகழ்மாலை சூட்டியுள்ளனர். அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் முதல்வர் கைது செய்திருக்க [illegible] கிறார் - என்று [illegible] தெரிவித்துள்ளார்.

# இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தக்கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர் படுகொலையைக் நிறுத்தக் கோரியும், இலங்கைக்கு இந்திய அரசு அளித்து வரும் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது.

சென்னையில் உள்ள மெமோரியல் அரங்கம் பகுதியில் அதன் மாவட்ட அமைப்பாளர் வ.டேவிட் செல்லப்பா தலைமையில் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் இக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கண்டன உரைகளை ஞானம், மனோகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இலங்கை அரசே!

ஈழத் தமிழரின் மீதான இனவெறி போரை உடனே நிறுத்து!

தமிழீழப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை உடனே திரும்பப் பெறு!

இந்திய அரசே!

ஈழத் தமிழரின் தனிநாடு அமைத்துக் கொள்ளும் உரிமையை அங்கீகரி!

இனவெறி போரால் அவதியுறும் ஈழத் தமிழ் மக்களுக்கு உணவு, மருத்துவ நிவாரண உதவிகளை உடனே வழங்கு!

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு!

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்!

இலங்கை அரசின் அரக்கத்தனமான தாக்குதல்களிலிருந்து தற்காத்து கொள்ள தமிழக மீனவர்களுக்கு ஆயுதம் வழங்கு!

என்பன உள்ளிட்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# இராமேஸ்வரத்தில் 4 பேர்கைது

சென்னை, ஒக்.23

இலங்கையில் இருந்து வந்த நால்வர் கியூப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையில் அவர்கள் 4 பேரும் கடற்புலிகள் என்பது தெரிய வந்தது என பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் பகுதியைச் சேர்ந்த கனகராஜ் (வயது -24), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியசீலன் (வயது -19), திருகோணமலையைச் சேர்ந்த ரமேஷ் (வயது -20), கிளிநொச்சியைச் சேர்ந்த ரமேஷ் (வயது -20) என்ற விவரமும் தெரிய வந்தது. இவர்கள் ஓராண்டுக்கு முன்பு கடற்புலிகள் பிரிவில் சேர்ந்துள்ளனர் என்பது தெரியவந்தது.

அவர்கள் 4 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, செங்கல்பட்டில் உள்ள புலிகளுக்கான சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான அல் - குவைதா போராளிகள் மீது விசாரணை நடத்த சவுதி அரேபியா ஏற்பாடு!

ரியாத், ஒக்.23

அல்-குவைதா போராளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 991 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என, சவூதி அரேபிய உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

நீதிமன்ற விசாரணைக்கு முன் இவர்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என இளவரசர் நயீப் பின் அப்துல் அஸீஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் விசாரணைக்கான திகதிகள், சந்தேக நபர்களின் அடையாளங்கள், ஆகியவற்றை அவர் வெளியிடவில்லை. எத்தகைய குற்றச்சாட்டுகள் என்ற விவரங்களையும் வெளியிடவில்லை.

2003ஆம் ஆண்டு முதல் சவூதி அரேபியாவில் தீவிரவாதிகளால் அவ்வப்போது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இவற்றில் 164 பேர் வரை கொல்லப்பட்டுள்ளார்கள். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருக்கின்றனர் என சவூதி பாதுகாப்பு வட்டாரம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை இது தொடர்பாக இளவரசர் நயீப் பின் அப்துல் அஸீஸ் ஊடகங்களுக்கான அறிக்கை யொன்றையும் விடுத்துள்ளார். அதில் அவர், 2003ஆம் வருட மே மாதம் முதல், கொன்சர் வேட்டிவ் முஸ்லிம் இராஜதானியமான சவூதியில், தீவரவாதிகளால் முப்பதுக்கு மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தாக்குதல்களில் 90 சிவிலியன்களும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 74 வீரர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். 439 சிவிலியன்களும், 657 பாதுகாப்புப் படைவீரர்களும் காயமடைந்துள்ளார்கள் என்றும் இளவரசர் விளக்கியுள்ளார்.

அதேவேளை 160 தாக்குதல்கள் தக்க தருணத்தில் முறியடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் விவரித்துள்ளார்.

அதேவேளை சந்தேக நபர்களுக்கு எதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் போது தங்கள் அவதானிப்பாளர்களையும் அனுமதிக்குமாறு நாம் சவூதி அரேபிய அதிகார பீடத்துக்கு விண்ணப்பித்துள்ளோம் என, அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமைகள் காப்பகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவில், அதன் புலனாய்வுத் துறையின் முகாம்களில் ஏறத்தாழ மூவாயிரம் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். எத்தகைய குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமலே இவர்கள் வருடக்கணக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். சட்ட வல்லுநரின் ஆலோசனைகளைப் பெறவோ, அவர்களை சந்திப்பதற்கோ இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்றும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2007 ஆம் வருட நவம்பரில் மீள் கல்வித் திட்டத்தின் கீழ், 1,500 சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

எனினும், இத்தொகையினரை விட மேலதிகமானோர் பின்னர் கைது செய்யப்பட்டு, முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மனித உரிமைகள் காப்பகத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய வம்சாவளி படத்தயாரிப்பாளர் பாகிஸ்தானில் மாயம்

கராச்சி, ஒக்.23

பாகிஸ்தானில் சிந்துமாநில தலைநகரான கராச்சியில், படத்தயாரிப்பாளர் சதீஷ் ஆனந்த் திங்கட்கிழமை, இனந்தெரியாத குழுவொன்றால் கடத்தப்பட்டார். 57 வயதான இவர், இந்திய நடிகை ஜூகி சாவ்லாவின் உறவினருமாவார்.

சதீஷ் ஆனந்த் கராச்சியில் மிகக் குறைவான எண்ணிக்கையில் வசிக்கும் இந்துக்களில் ஒருவர். இவர் எவரெடி பிக்சர்ஸ் என்னும் பெயரில் சினிமா படத்தயாரிப்பு நிறுவனமொன்றை நடத்தி வருகின்றார். அத்துடன் சினிமா விநியோகஸ்தராக வுமிருந்து வருகிறார்.

இவர் திங்கட் கிழமை இரவு வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது, இனந்தெரியாத குழுவொன்றால் கடத்தப்பட்டார்.

இக்கடத்தல் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், இவரது சாரதி சாட்சியமளிக்கையில், ''ஒரு கோஷ்டி காரை வழிமறித்து நிறுத்தியது. அதிலிருந்த ஒருவர் எனக்கு ஊசி போட்டார். நான் மயக்கமடைந்தேன். மயக்கம் தெளிந்து பார்த்த போது, ஆனந்த்தைக் காணவில்லை'' எனக்குறிப்பிட்டுள்ளார்.

## உலக அரங்கில்

# நேட்டோ வான்படை தாக்குதலில் ஆப்கான் இராணுவத்தில் 9 பேர் பலி

காபூல், ஒக்.23

ஆப்கானின் கிழக்குப் பகுதியில் நேட்டோ தலைமையிலான படைகள் மேற்கொண்ட வான்வழித்தாக்குதலில் 9 ஆப்கான் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். நால்வர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கோஷ்ட் மாகாணத்திலுள்ள ஆப்கான் சோதனை சாவடி மீது, ஹெலிக் கொப்டர்கள் இத்தாக்குதல்களை நடத்தின என உள்ளூரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கோஷ்ட் மாகாணத்திலுள்ள டூவா மண்டா மாவட்டத்தில் இந்தச் சோதனைச் சாவடி அமைந்துள்ளது. செவ்வாய்க்கிழமை மாலை, இதன் மீது அந்நிய ஹெலிக் கொப்டர்கள் தாக்குதல்களை மேற்கொண்டன என கோஷ்ட் அதிகாரி லுட்புல்லா பாபாகார் ஹெய்ல், ரொய்டர் செய்திச்சேவைக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அமெரிக்க இராணுவம் அறிக்கை யொன்றை விடுத்துள்ளது. இத்தாக்குதல்களில் கூட்டுப்படைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இதே பிராந்தியத்தில் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தி விட்டு திரும்பிய படையினர் இத்தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சோதனைச் சாவடியை அவதானித்த படையினர், இதுவும் தீவிரவாதிகளின் இலக்காக இருக்கலாமென தவறுதலாக ஊகித்து, தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் அடையாளம் காண்பதில் தவறு ஏற்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருப்பினும் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆப்கானிலுள்ள அமெரிக்கப் படைகளின் பிரதம பேச்சாளர் கேர்ணல் கிரீக் ஜூலியன் தெரிவித்தார்.

# நாயைக் காப்பாற்றிய அமெரிக்க வீராங்கனை

வாஷிங்டன், ஒக். 23

ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தில் 28 வயதுப் பெண் வீராங்கனை க்வென் பெபெர்க் இடம்பெற்றுள்ளார். சுற்றியும் குப்பைகளில் தீப்பற்றி எரிய அதற்குள் சிக்கிக் கொண்டிருந்த ராட்செட் என்ற நாயை க்வென்னும் மற்றுமொரு வீரரும் மீட்டனர். மீட்கப்பட்ட நாய் க்வென்னுடன் ஒட்டிக் கொண்டது. அடுத்தமாதம் க்வென் அமெரிக்கா திரும்புகிறார். அப்போது நாயையும் அழைத்து வர விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்தார். ஆனால் பிஜிகளில் இதற்கு இடம் இல்லை என்று கூறி நிராகரிக்கப்பட்டு விட்டது.

ஈராக்கில் நாய்களையும் பூனைகளையும் மக்கள் வெறுக்கின்றனர். இவை நோய் ஏற்படுத்துபவை என்று அவர்கள் நம்புகின்றனர். எனவே ஈராக்கிலேயே ராட்செட் [illegible] சென்றால் அது கொல்லப்பட்டுவிடும் என்று க்வென் அச்சம் தெரிவித்துள்ளார்.

க்வென்னுக்கு உதவ விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்கும் சர்வதேச அமைப்பு முன்வந்துள்ளது. இதற்காகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டெர்ரி கிரிஸ்ப் என்பவர் ஈராக் செல்லவுள்ளார். க்வெனின் மனதை மாற்றுவதற்காக நாயிடமிருந்து அவர் பிரிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் விதிகளைத் தளர்த்தி ராட்செட்டை க்வென் அழைத்து வர அனுமதிக்கும் படி இணையம் மூலம் சர்வதேச அளவில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். அமெரிக்க ஜனநாயகக் கட்சி எம்.பியும் இது தொடர்பாக இராணுவ அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

# தீவிரவாதிகள் மீதான பாகிஸ்தானின் நடவடிக்கைக்கு அமெரிக்கா பாராட்டு

இஸ்லாமாபாத், ஒக். 23

தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளது. கடந்த ஒருமாத கால நடவடிக்கைகளில், ஏறத்தாழ ஆயிரத்துக்கு மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதியிலுள்ள சுவாத் பள்ளத்தாக்கில் ஊடுருவியுள்ள இந்த தலிபான் தீவிரவாதிகள் அவ்வப்போது ஆப்கானிஸ்தானுக்குள்ளும், பாகிஸ்தானுக்குள்ளும் நுழைந்து தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்.

இவர்களுக்கு எதிராகவே, பாகிஸ்தான் அரச விமானப்படை மூலமாகவும், தரைப் படை மூலமாகவும் அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்துக்கு வருகை புரிந்துள்ள அமெரிக்க வெளிவிவகார துணையமைச்சர் ரிச்சர்ட் பவுச்சர், பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ராஜா கிலானி ஆகியோரைச் சந்தித்து, தொடர் பேச்சுகளை மேற்கொண்டார்.

அப்போது அவர் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் பேசினார். அதே வேளை தலிபான், அல் - குவைதா தீவிரவாதிகளுக்கு எதிராக, முழுவீச்சில் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள அதிரடித் தாக்குதல்களுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டார்.

ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியிருக்கும் வேளையில் பவுச்சர் பாகிஸ்தானுக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அணு ஆயுதப் பரவல் தடை குறித்து புதிய உடன்படிக்கை உருவாக வேண்டும்

## அவுஸ்திரேலியக் கூட்டத்தில் வலியுறுத்து

மெல்போர்ன், ஒக். 23

''இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது ஜப்பானிய ஹிரோஷிமா நகர் அணுகுண்டு போட்டு நிர்மூலமாக்கப்பட்டது. அதைவிட உலகத்தில் அணுகுண்டால் படு பயங்கர விளைவுகள் ஏற்படக்கூடும்.'' என அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் தொடர்பான புதிய ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் புதிய ஆணைக்குழுவின் கூட்டம் அவுஸ்திரேலியாவின் தலைநகரான மெல்போர்னில் ஆரம்பமாகியது. ஆரம்ப அமர்வில் பேசிய தலைவர்கள், அணு ஆயுதம் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கிவிட்டால் விவரிக்க முடியாத பாரிய அனர்த்தங்களுக்கு மனித குலம் முகங்கொடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்கள்.

ஆணைக்குழுவின் துணைத்தலைவர் கரீத் ஈணைஸ்பேசுகையில், ''அணு ஆயுதங்களைத்தவறுதலாகப் பயன்படுத்தினாலும், அணு ஆயுதங்களைக் கையாளும் போது விபத்து ஏற்பட்டாலும், பேரழிவுகள் விளையும். இவை உலகப் பேரழிவுக்கு வழி சமைத்து விடும்'' என்றார்.

உலகின் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட பல்வேறு இடங்களில் அணு ஏவுகணைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. திருடப்படும் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கைகளை சென்றடைவதற்கான அபாயமுண்டு. இது விடயத்தில் எம்மால் அசிரத்தையாக இருக்க முடியாது'' என்றும் அவர் கூறினார்.

''ஒரு சிறு அணுகுண்டு வெடித்தால் கூட், சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை செத்துமடிவார்கள். எனவே அணுவாயுதங்கள் பரவாமல் இருக்க, கூடிய அவதானிப்பு தேவை. அது மட்டுமல்ல. உள்ள அணு ஆயுதங்களும் முறையாக பாதுகாக்கப்படவேண்டும். பராமரிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.




நியூயோர்க் பங்குச்சந்தைக்கு வெளியே கரடி, காளை பொம்மைகளை வைத்து இப்போதைய நிதி நெருக்கடி நிலையை ஒரு குழு கிண்டல் செய்கிறது. கரடியின் பிடியில் பங்குச்சந்தை இருப்பதாகக் காட்டினால் நஷ்டம் என அர்த்தம். காளை என்றால் இலாபம். இந்நிலையில் அமெரிக்கப் பங்குச் சந்தை ரிசேர்வ் வங்கித் தலைவர் பென் பேர்னான்கோ, நிதிநெருக்கடியைச் சமாளித்து பொருளாதா[illegible] இருக்கும் எனக்கூறியிருந்தார். அரசு கோடிகளைக் கொட்டினால் [illegible] முதலீட்டாளர்களிடம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் நூதனசாலையை புனரமைக்க அமெ.நிதியுதவி

பக்தாத், ஒக்.23

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் சேதமடைந்த நிலையில் பூட்டப்பட்டிருக்கும் நூதனசாலையை புனரமைக்க, அமெரிக்கா ரூ 15,600 கோடி மானியம் வழங்க முன் வந்துள்ளது.

2003 ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்ட இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர், இந் நூதனசாலையிலிருந்து 15 ஆயிரம் அரிய கலைப்பொருள்கள் திருட்டுப் போய்விட்டன. குண்டுத்தாக்குதல்களாலும் கட்டடம் சேதமடைந்தது.

''திருடப்பட்ட அரிய கலைப்பொருள்களில் ஆறாயிரம் கலைப்பொருள்கள் மீட்கப்பட்டன. எனினும் சேதமுற்ற நூதனசாலை பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இந்த நூதன சாலையைப் புனரமைக்க, அமெரிக்கா ரூபா 15,600 கோடி மானியம் வழங்கும் என, அமெரிக்க வெளி விவகாரத் திணைக்கள கல்வி, கலாசார விவகார துணையமைச்சர் கோலி அமோரி தெரிவித்துள்ளார்.

இந்த நூதனசாலைக்கு செய்யும் முதலீடு, ஈராக்கின் பாரம்பரியத்தை மட்டும் பாதுகாப்பதற்காக அல்ல. உலக பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்காகவே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவுஸ்திரேலிய அணிக்கு என்ன நடந்தது?

## டோனி ஆச்சரியம்!



மொஹாலி, ஒக்.23

''உலகச் சம்பியன் அவுஸ்திரேலிய அணி இதுபோன்று சீக்கிரம் அடிபணிந்ததை நான் பார்த்ததில்லை. அந்த அணிக்கு என்ன நடந்தது என்று நினைக்கும் போது ஆச்சரியமரக இருக்கிறது.''

இவ்வாறு மொஹாலி டெஸ்ட் வெற்றியின் பின்னர் இந்திய அணியின் தலைவர் டோனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் ஒரு கட்டத்தில் 13 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 22 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. அப்போது நான் ''அவுஸ்திரேலிய அணி இதுபோன்று மோசமாக விளையாடுவதை நாம் அடிக்கடி பார்க்க முடியாது'' என்று ராகுல் டிராவிட்டிடம் ஆச்சரியமாகச் சொன்னேன்.

அவுஸ்திரேலிய அணி சில போட்டிகளில் மோசமாக விளையாடியுள்ளது. அதற்காக அவர்கள் சோடை போய்விட்டார்கள் என்று கருத முடியாது. இன்னும் அவர்கள் தான் முதல் தர அணி. திறமையான வீரர்களைக் கொண்ட அணி. எனவே அவர்கள் சரிவில் இருந்து வலுவான அணியாக மீண்டு எழுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அடுத்த 2 டெஸ்ட்களும் நல்ல போட்டிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்திய அணியில் 4 பந்துவீச்சாளர்களும் தங்கள் பணியை அற்புதமாகச் செய்தார்கள். சகீர்கான் தனது பந்துவீச்சில் தற்போது உச்சக்கட்ட நிலையில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவருக்கு எந்தக் காயமும் இல்லை. உயிரைக் கொடுத்துப் பந்துவீசுகிறார்.

இந்த டெஸ்டை எடுத்துக்கொண்டால் கங்குலி 7 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தமை பசுமையான நினைவாக இருக்கும். ஏனெனில் அவருக்கு இதுவே கடைசி டெஸ்ட் தொடராகும். இதனால் அவர் நெருக்கடி இன்றி சிறப்பாக ஆடுகிறார். இப்படி விளையாடுவதைத் தான் நாங்கள் பார்க்க விரும்புகிறோம் - என்று கூறினார் டோனி.

இதேவேளை, அவுஸ்திரேலிய அணியின் மோசமான தோல்வி குறித்து அந்த அணியின் தலைவர் பொண்டிங் கூறியதாவது-

இந்திய வீரர்கள் அபாரமாகவும், ஆக்ரோஷமாகவும் விளையாடினார்கள். இந்த வெற்றிக்கு அவர்கள் தகுதியான அணி. எதிரணி 460 ஓட்டங்கள் குவிக்கும்போது, நாமும் அதே அளவுக்கு ஓட்டங்கள் எடுக்கவேண்டும். அதன்பிறகு மேலும் சிறப்பாகச் செயற்படவேண்டும். ஆனால் நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை. எங்களது வேகப்பந்து வீச்சு, சுழற்பந்துவீச்சு, துடுப்பாட்டம் எதுவுமே எடுபடவில்லை. மொத்தத்தில் நாங்கள் போட்டியிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டு விட்டோம்.

இந்த டெஸ்டில் எங்களது மோசமான ஆட்டம் குறித்து விரிவாக அலசி ஆராய்வோம். தவறுகளைத் திருத்திக்கொண்டு அடுத்த போட்டியில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம்.

எங்கள் அணி மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. சரிவில் இருந்து மீண்டு வரும் திறமை எங்களது வீரர்களிடம் உண்டு - என்றார்.



இந்தோனேசியாவின் பாலி கடற்கரையில் நடைபெற்றுவரும் 'ஆசிய பீச் கராத்தே' போட்டியில் இந்தோனேசிய வீரர்கள் இருவர் மோதிக்கொள்ளும் காட்சி.

# சகீர்கானுக்கு அபராதம்!

மொஹாலி, ஒக். 23

மொஹாலி டெஸ்ட் போட்டியில் ஹைடனை அவமரியாதை செய்த விவகாரத்தில், இந்திய வீரர் சகீர்கானுக்கு போட்டிச் சம்பளத்தில் இருந்து 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் போட்டி மொஹாலியில் நடந்தது. இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய துவக்க வீரர் ஹைடன், ஹர்பஜனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு., முறையில் ஆட்டமிழந்தார். அப்போது சகீர்கான், ஹைடனுக்கு குறுக்கே சத்தமிட்டு ஓடினார். சகீரின் செயலை ஹைடனும், நடுவரிடம் சுட்டிக் காட்டினார். இது குறித்து போட்டி நடுவர் கிறிஸ் பிராட் கூறுகையில்,'' சகீரின் செயலை ஏற்றுக் கொள்ள முடியாது. ஹைடனை அவமரியாதை செய்யும் நோக்கில் சகீர் நடந்து கொண்டுள்ளார். இது ஐ.சி.சி., விதிகளுக்கு புறம்பானது. இதனால் அவருக்கு போட்டி சம்பளத்தில் 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது,'' என்றார். அடுத்த 24 மணி நேரத்திற்குள் தண்டனையை எதிர்த்து முறையீடு செய்ய சகீருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை ஆட்ட நடுவர் கிரிஸ் புரோட் முன்னிலையில் நடைபெற்றது. தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட சகீர்கான் எதிர்காலத்தில் இதுபோன்று செயற்படமாட்டேன் என உறுதியளித்தார்.

இதுபோன்று சர்ச்சைகளில் இதுவரை சகீர்கான் சிக்காதமையால் அவருக்கு ஆட்ட ஊதியத்தில் 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மொஹாலி டெஸ்டில் இந்திய அணி எல்லை மீறியது என்கிறார் அவுஸ்திரேலிய தலைவர் ரிக்கி பொண்டிங். இது குறித்து பேட்டி அளித்த பொண்டிங் கூறுகையில்,''போட்டியின் போது லேசான மோதல்கள், சொற்போர் நிகழ்வதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இந்திய அணி எல்லை மீறிய செயல்களில் ஈடுபட்டது. அதனால் தான் நடுவர்கள் குறுக்கிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஹைடன் விடயத்தில் சகீரின் செயல் இவ்வகையைச் சார்ந்தது,'' என்றார்.

இதேவேளை, சகீர்கானுக்கு அபராதம் விதிக்கப்பட்டமைக்கு கவாஸ்கர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, சகீர்கான் நடந்துகொண்ட செயலுக்காக இப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியதில்லை. இந்திய துணைக்கண்ட வீரர்கள் மீது சர்வதேச கிரிக்கெட் சபை எப்போதுமே இப்படித்தான் நடவடிக்கை எடுக்கிறது - என்றார்.

# மீண்டும் சம்பியன் நிலையை நோக்கி இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்



பான், ஒக். 23

உலகின் முதல்தர செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த். சென்னையைச் சேர்ந்த அவர் நடப்பு உலக சம்பியனாகத் திகழ்கிறார். கடந்த ஆண்டு மெக்சிக்கோவில் நடந்த உலக செஸ் போட்டியில் ஆனந்த் சம்பியன் பட்டம் பெற்றார்.

இந்த ஆண்டுக்கான உலக செஸ் சம்பியன் பட்டத்துக்கான போட்டி ஜேர்மனியில் உள்ள பான் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆனந்துடன் ரஷ்ய கிராண்ட் மாஸ்டர் விளாடிமிர் கிரம்னிக் மோதிவருகிறார்.

13 சுற்றுக்களைக் கொண்ட உலக செஸ் போட்டியின் 6ஆவது சுற்று நேற்று நடந்தது. இதில் ஆனந்தின் திறமையான காய்நகர்த்தலால் கிரம்னிக் திணறினார். 47ஆவது காய்நகர்த்தலுக்கு ஆனந்த் வெற்றிபெற்றார்.

இது அவர் பெற்ற 3ஆவது வெற்றியாகும். 3 சுற்றுக்கள் சமநிலையில் முடிந்தது. 6 சுற்றுக்களின் முடிவில் ஆனந்த் 4.5-1.5 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளார். 3 புள்ளிகள் முன்னிலையில் உள்ளதால் ஆனந்த் உலக செஸ் சம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்ற நெருங்கி விட்டார்.

யார் முதலில் 6.5 புள்ளிகளைப் பெறுகின்றனரோ அவரே பட்டம் பெறுவார். எஞ்சிய 6 ஆட்டத்தில் 4 சுற்றில் சமன் செய்தாலே ஆனந்த் மீண்டும் பட்டத்தை வென்றுவிடுவார். போட்டியின் 7ஆவது சுற்றில் ஆனந்த் இன்று விளையாடுகிறார்.




# பிரட் லீயுடன் கருத்து மோதல் இல்லை!

## ரிக்கி பொண்டிங் தெரிவிப்பு

அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீயுடன் தனக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என அந்த அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறினார்.

இந்திய அணியுடனான தனது இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டத்தின்போது மதிய போசன இடைவேளை வரை பிரெட் லீ ஒரு ஓவர் கூடப் பந்து வீசவில்லை. ஆனால் பகுதி நேரப் பந்துவீச்சாளரான ஹஸி கூட பந்துவீசினார். இது குறித்து களத்திலேயே பொண்டிங்கும், லீயும் பேசினார் என அவுஸ்திரேலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இது குறித்து ஆஸி. அணித்தலைவர் பொண்டிங் கூறியதாவது-

பிரட் லீக்கு பந்துவீச வாய்ப்பளிக்காதமை ஏற்கனவே திட்டமிடப்பட்டதுதான்.

ஆனால் இது குறித்து அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதைத்தான் அவரிடம் களத்தில் நான் விளக்கினேன். தவிர பத்திரிகைகளில் குறிப்பிட்டதுபோல அவருக்கும் எனக்கும் எந்தப்பிரச்சினையும் இல்லை.

எனது வாழ்நாளில் மிக மோசமான தோல்வி இது. டெஸ்ட் தொடரில் 0-1 என பின்தங்கியிருந்தது எங்களுக்குப் பழக்கமில்லை. இதுபோன்ற தோல்வியையும் சந்தித்தது இல்லை. இது குறித்து ஒவ்வொருவரும் சிந்தனை செய்வோம்- என்றார் பொண்டிங்.

# ஷேவாக்கின் விளையாட்டுப் பள்ளி



இந்திய கிரிக்கெட் வீரர் ஷேவாக்கின் 'ஸ்போர்ட்ஸ் அக்கடமிக்கு' அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அரியானா முதல்வர் புபிந்தர் சிங் ஹூடாவின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ''அரியானாவில் ஸ்போர்ட்ஸ் அக்கடமி துவங்க அனுமதி கேட்டிருந்தார் ஷேவாக். இதற்குத் தேவையான 23 ஏக்கர் நிலம், 33 ஆண்டு குத்தகையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ.3 லட்சம் (இந்திய மதிப்பில்) ரூபாவை அவர் வரியாகச் செலுத்த வேண்டும். ஒருங்கிணைந்த ஸ்போர்ட்ஸ் அக்கடமியில் முதலில் 400 பேருக்கு இடமளிக்கக்கூடிய கிரிக்கெட் அக்கடமி உருவாக்கப்படும், கால்பந்து அக்க[illegible], 800 மாணவர்கள் பயி[illegible] எனத் தெரிவிக்கப்படுகிறது.



சமீபத்தில் மொஹாலியில் நடந்த டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற சாதனையைப் படைத்தமைக்காகவும், கங்குலி இந்த டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறுகின்றமைக்காகவும் இருவரையும் பாராட்டி பஞ்சாப் கிரிக்கெட் சபை விருது வழங்கியது. இருவரும் தமக்கான விருதுகளுடன் காணப்படுகின்றனர்.

# மொஹாலி டெஸ்ட் துளிகள்...

* மொகாலி டெஸ்டில் 320 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றதே இந்திய அணி அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற போட்டியாக அமைந்தது. முன்னதாக 280 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை (1996-97, கான்பூர்) வீழ்த்தியுள்ளது. அவுஸ்திரேலிய அணியுடன் நடந்த போட்டிகளில், (1977-78) மெல்போர்ன் டெஸ்டில் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வென்றுள்ளது.

* அவுஸ்திரேலியாவுடன் இந்திய மண்ணில் நடந்துள்ள 38 டெஸ்ட்களில் இந்தியா 12ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது (12 தோல்வி, 13 சமநிலை, ஒரு டை). இரு அணிகளும் மோதியுள்ள 74 டெஸ்ட்களில் இந்திய அணி 17 போட்டிகளில் வென்றுள்ளது (தோல்வி 34, சமநிலை 22, ஒரு டை).

* டோனி தலைமையில் விளையாடிய 2 டெஸ்ட் போட்டிகளிலுமே இந்தியா வென்றுள்ளது. தென்னாபிரிக்க அணியுடன் கான்பூரில் நடந்த போட்டியில் (ஏப்ரல் 2008) 8 விக்கெட் வித்தியாசத்திலும், மொஹாலி போட்டியில் 320 ஓட்ட வித்தியாசத்திலும் டோனி தலைமையிலான இந்திய அணி வென்றுள்ளது. சச்சின், கங்குலிக்கு பிறகு முதல் 2 டெஸ்டிலும் வென்ற 3வது இந்தியத் தலைவர் என்ற பெருமை டோனிக்கு கிடைத்துள்ளது.

* டெஸ்ட் போட்டிகளில் டோனி முதல் முறையாக ஆட்டநாயகன் விருது பெற்றுள்ளார். மொஹாலி டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் 92 ஓட்டங்கள், 2ஆவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்கள், 2 பிடியெடுப்பு மற்றும் ஒரு ஸ்ரொம்ப் செய்ததுடன் அணியை வெற்றிகரமாக வழிநடத்தியமைக்காக விருதை தட்டிச் சென்றார்.

* [illegible] போட்டியில் 7 விக்கெட் வீழ்த்திய 7ஆவது இந்திய பந்துவீச்சாளர் என்ற [illegible] அமித் மிஸ்ராவுக்கு கிடைத்தது. ர்வானி (16), திலீப் தோஷி (8), ஷிவ்லால், முனாப், அபித் அலி, வி.வி.குமார் ஆகியோர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் நீதிமன்ற உத்தரவை அடுத்து
# மின்சாரத்துக்குரிய புதிய கட்டண முறை அடுத்த மாதம் தொடக்கம் நடைமுறைக்கு

கொழும்பு, ஒக். 23

2006 டிசெம்பரில் இருந்ததை விடவும் குறைந்த அளவில் மின்சாரக் கட்டணத்தை அறவிடுவதற்கு இலங்கை மின்சார சபை இணங்கியமையை அடுத்து, எதிர்வரும் நவம்பர் (அடுத்த மாதம்) முதல் அவ்வாறு அறவிடுமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் கே. ஸ்ரீபவன், கே.ஏ.இரட்னாயக்கா ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

மின்சாரசபை அளவுக்கு அதிகமாகக் கட்டணம் அறவிடுவதாக எழுப்பப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, மின்கட்டணத்தைக் குறைக்குமாறு மின்சாரசபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி குறைந்த கட்டணம் அறவிடுதல் தொடர்பான யோசனைத் திட்டம் ஒன்றை சபை நேற்று உயர்நீதிமன்றுக்கு சமர்ப்பித்தது.

அதைப் பரிசீலித்து, ஏற்று அங்கீகரித்த உயர்நீதிமன்றம் அந்தக் கட்டண முறையை நவம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும்படி உத்தரவிட்டது.

அறவிடுதல் தொடர்பான யோசனைத் திட்டம் ஒன்றை சபை நேற்று உயர்நீதி மன்றுக்கு சமர்ப்பித்தது.

அதைப் பரிசீலித்து, ஏற்று அங்கீகரித்த உயர்நீதிமன்றம் அந்தக் கட்டண முறையை நவம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்தும்படி உத்தரவிட்டது.

அடுத்த மாதம் அமுலுக்கு வரும் புதிய திட்டத்தின் படி கட்டண விவரம் வருமாறு:-

| யுனிட் அளவு | ஒரு யுனிட்டுக்கான கட்டணம் | நிலையான கட்டணம் |
|---|---|---|
| 00-30 | ரூ.3.00 | ரூ.60.00 |
| 31- 60 | ரூ.4.70 | ரூ.90.00 |
| 61-90 | ரூ.7.50 | ரூ.120.00 |
| 91-180 | ரூ.16.00 | ரூ.180.00 |
| 181 -600 | ரூ.25.00 | ரூ.240.00 |
| 600க்கும் மேல் | ரூ.30.00 | ரூ.240.00 |

மதத்தலங்கள் மற்றும் வழிபாட்டு இடங்களுக்கான கட்டண விவரம் வருமாறு:-

| யுனிட் அளவு | ஒரு யுனிட்டுக்கான கட்டணம் | நிலையான கட்டணம் |
|---|---|---|
| 0-30 | 2/50 | ரூ.60.00 |
| 31- 60 | 3/70 | ரூ.90.00 |
| 61-90 | 3/70 | ரூ.90.00 |
| 91-120 | 9 /= | ரூ.180.00 |
| 121 -180 | 10/= | ரூ.180.00 |
| 181க்கும் மேல் | 12/50 | ரூ.240.00 |

## தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டச் செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.23

தென்மராட்சி பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் செயற்பாட்டினை பிரதேச கமநல சேவைகள் நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

விவசாய போதனாசிரியர்கள் அனைத்து இடங்களுக்கும் நேரடியாகச் சென்று வீட்டுத் தோட்டத்தினை மேற்கொள்வதற்கான உள்ளீடுகள் விவசாயப் பொருள்கள், உரவகைகள், பீடைநாசினிகள் போன்றவற்றை விநியோகிப்பதுடன் ஆலோசனைகளையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேட்டு நிலப் பயிர்களான கத்தரி, வெண்டி, பயறு, சணல், கௌபி, கச்சான் உள்ளிட்ட உள்ளீடுகள் வழங்கி வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (202-207)

## சஞ்சிகை வெளியீடு

யாழ். உயர்தொழிநுட்பவியல்நிறுவன உயர் தேசிய ஆங்கில வட்டத் தின் 'ECHO' வருடாந்த சஞ்சிகை வெளியீடு இன்று காலை 9.30 மணிக்கு மேற்படி நிறுவனத் தின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கே.தேனுஸா தலைமையில் நடைபெறும் விழாவில் மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.கதிரமலை பிரதம விருந் தினராகவும், யாழ்.பல்கலைக்கழக மொழி மற்றும் ஆங்கில துறைசிரேஷ்ட விரிவுரையாளர் சி.சி. அர். சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பதேவி கந்தசாமி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வறணன், அச்சுவேலியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி புஸ்பதேவி கந்தசாமி 21.10.2008 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் முருகன் கந்தசாமி அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற முருகேசு - சின்னம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற சின்னத்துரை, அருளானந்தம் மற்றும் பாஸ்கரதேவன், சின்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தினி (குடும்ப நல உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), சூரியகுமார் (கால் நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், திருநெல்வேலி), காலஞ்சென்ற உதயசூரியன் மற்றும் உதயராசா (மரக்கூட்டுஸ்தாபனம், மதவாச்சி), நிசாந்தினி (கலைப்பீடம் 2002-2004 யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணியின் மைத்துனியும் செல்வரஞ்சன், வசந்தாதேவி, பிரநிதி ஆகியோரின் மாமியாரும் கஜானன், கயூரிகா, நிதுசா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.10.2008) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் நடராஜா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராஜா நேற்று (22.10.2008) புதன் கிழமை மாலை காலமானார்.

அன்னார் கோண்டாவில் கிழக்கு பழையகாளி கோவிலடியை சேர்ந்த சுப்பிரமணியம்- கனகம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும், வடக்கு புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த தில்லையம்பலம்- சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், தர்மவதி, சுதன், சுரேஸ்குமார், ரமேஸ்குமார், சுதாகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மயோகேஸ்வரி, வனிதா, அமிர்தலிங்கம்(கண்ணன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவரூபன், அஜீவன், கனிஸ்டன், மிதுலா, ஜஸ்மின், சன்ஜா, சூரிஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொற்பதி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (23.10.2008) வியாழக்கிழமை மதியம் 12மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*கோண்டாவில்.* (79429)
தகவல்:
ரமேஸ்குமார்(மகன்)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற றவிக் பொலிஸ் - சாஜன்ற்)



கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய இரத்தினம் பாலசுப்பிரமணியம் 21.10.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (பிஸ்கால்)-நாகரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-கெங்கமுத்து தம்பதியினரின் மருமகனும், சுசீலாதேவியின் (கனடா) அன்புக் கணவரும், தியாகராசா, கேதீஸ்வரி, சரஸ்வதி, பரமேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஈஸ்வரி, அருளானந்தம் (பச்சைக்கிளி), திருஞானம், காசிலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரியந்தி (கனடா), பிரதீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகபாலன் (கனடா), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் , அஸ்விதா, அபிஜித், அபிஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.10.2008 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சி.அருளானந்தம்,*
*இல: 14 செல்லர் வீதி,*
*நல்லூர்.* (79435)
தகவல்:
சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா துரைச்சாமி

புத்தூர், வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா துரைச்சாமி 21.10.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகளும், துரைச்சாமியின் அன்பு மனைவியும் சத்தியதேவன் (மாலைதீவு), யோகேஸ்வரன் (யாழ்.பல்கலைக்கழகம், வெளிவாரிப்பிரிவு), பாலேஸ்வரன் (இலண்டன்), சசிகலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா கல்லூரி), கௌரி(ஆசிரியை, யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சுபாஜினி(கொழும்பு), இராகவன்(இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசிகா, சுவஸ்திகன், கேசினி, வைஷ்ணவி, சாரங்கி, லக்ஷ்மி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பி.ப 1.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வாதரவத்தை,*
*புத்தூர்.* (79427)
தகவல்:
து.யோகேஸ்வரன்(மகன்).

## திருமதி பத்மாவதி கனகசபை

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி கனகசபை 21.10.2008 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், அருந்தவம் (ஆசிரியை, மு/உடையார்கட்டு ம.வி), தவபாலன் (சிலாபம்), காலஞ்சென்ற நவநீதம், புண்ணியவதி (ஆசிரியை, யா/கொ.இ.கல்லூரி), மதிவதனி(முகாமை உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளங்கோவன்(தொழிநுட்ப உத்தியோகத்தர், கால்நடை வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு), கிருபாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், இரமணன், ஆரணி, மதுரா, பிரசாந், தர்சிகா, ஸ்ரீசாந் ஆகியோரின் போத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*36/16, பிரம்படி லேன்,*
*கொக்குவில்.* (79425)
தகவல்:
பிள்ளைகள்.

## சதாசிவம் சிவபாலச்சந்திரன் (பொன்னுத்துரை)



பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவபாலச்சந்திரன் 21.10.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் சபாபதி - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் கோபிராஜ் (மலேசியா), தர்சிகா (கொழும்பு), கபில்ராஜ் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னக்கிளி, செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைராஜா, சாந்திமதி, தயாபரன், தவமணிதேவி, தயாநிதி - சுதாமதி, சுமதி - வாணிதாஸ், ஆகியோரின் அன்பு மைத்துனரும் துராஜினி, குமரராஜா, சர்வாஜினி, வரதராஜின், ஆரதி, லதாங்கினி, சிவதர்சன், ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விமலராஜ், சதீஸ்ராஜ், சந்திரராஜ், மோகனராஜ், பிரவின், சுயன், லக்ஷன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2008) வெள்ளிக் கிழமைமு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பெரியவிளான்,*
*இளவாலை.* (79426)
*தகவல்:*
*மனைவி.*

## திருமதி புஸ்பராணி கமலசிங்கம்

நவிண்டில், கரணவாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 50, சப்பல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி கமலசிங்கம் 21.10. 2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- சுந்தரம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும், சின்னத்தம்பி கமலசிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும், கமலினி(மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்), செல்வி (மாவட்ட வைத்தியசாலை, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, வண்ணமயில் மற்றும் சிறிஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 50, சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79432)
தகவல்:
சி.ஸ்ரீஸ்கந்தராசா
(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் கடும் மழை; ஐம்பதாயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 23

நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக பல பகுதிகளிலும் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து 11 ஆயிரத்து ஐந்நூற்று பதினான்கு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளுக்காக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு 40 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி அரச அதிபர்கள் ஊடாக அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்தது.

களுத்துறை மாவட்டத்தில் தொடங்கொடவளல்லாவிட்ட, புலத்சிங்கள, பண்டாரகம, ஹொரண, மில்லனிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 61 குடும்பங்களைச் சேர்ந்த 226 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்ல, கம்பஹா, கட்டான, வத்தளை, நீர்கொழும்பு ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் 10 ஆயிரத்து 524 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 346 பேர் பாதிப்புக்குள்ளாயுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் முலட்டியன, அக்குறஸ்ஸ, திஹகொட, மாத்தறை, வெளிப்பிட்டிய, கிரிந்த, திக்குவளை, தெவிநுவர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 236 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

காலி மாவட்டத்தில் நியமகல மக்கல முல்ல, மரற்தெனிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 690 குடும்பங்களைச் சேர்ந்த 2,790 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக 18 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த நிவாரண அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## தமிழர்கள் மூவரை கொழும்பில் காணவில்லை

ஜெம்பட்டா வீதியைச் சேர்ந்த சரவணமுத்து சதீஸ்குமார் (வயது-33), ரட்ணம் வீதியைச் சேர்ந்த கே. ஏ. அன்ரனி (வயது -48), நவகம்புரயைச் சேர்ந்த ராஜரட்ணம் சசிகுமார் (வயது-29) ஆகிய மூவர் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் அண்மையில் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக இவர்களது உறவினர்கள் வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்று குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## உணவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதையை மூடி புலிகள் தடுத்து நின்ற போதும் "கடல் மார்க்கமாக பயணத்தினையும் தாக்குவோம்" எனப் புலிகள் அச்சுறுத்திய போதும், அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் மக்களுக்கான தேவைகளுக்கு முன்னுரிமையளித்து நாம் மக்களுக்காகச் செயற்பட்டோம். நியாயமானதும்,சாத்தியமானதுமான எமது இந்த முயற்சிக்கு ஜனாதிபதி உட்பட அரச நிர்வாகத்தினரும் தமது ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.

இத்தகைய நெருக்கடி மிகுந்த நேரத்தில் புலிகள் நேற்று (22.10.2008) இரண்டு உணவுக் கப்பல்களைத் தாக்கியுள்ளனர். தாக்கப்பட்ட இரு கப்பல்களிலும் அரிசி, சீனி, கட்டடப்பொருள்கள், சிமெந்து ஆகிய பொருள்களே ஏற்றி வரப்பட்டிருந்தன. அதுவும் அரிசியை கொழும்பு விலையில் கிடைக்கச் செய்வதற்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. புலிகளின் இந்த உணவுக் கப்பல்கள் மீதான தாக்குதலானது எவ்வகையிலும் இராணுவ நோக்கம் கொண்டதல்ல. இது முழுக்க முழுக்க யாழ். குடாநாட்டு மக்களின் உணவு, அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அபிவிருத்தியை இலக்கு வைத்த தாக்குதலாகும். மக்களைப் பட்டினி போடுவதன் ஊடாகவும், அபிவிருத்தியைத் தடுப்பதன் ஊடாகவும் புலிகள் தமது யுத்தப் பிரசாரத்துக்கு வலுச் சேர்க்கவே முயற்சிக்கின்றனர்.

புலிகளின் இத்தகைய பாசிச மக்கள் விரோத நடவடிக்கையை எதிர்ப்போம். எமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்ட உரத்துக்குரல் கொடுப்போம். எமது கண்டனத்தை வெளிப்படுத்த, வன்முறையைக் கையில் எடுக்காமல், ஹர்த்தால் ஒன்றை அனுஷ்டிப்பதன் மூலம் வெளிப்படுத்துவோம். வியாழக்கிழமை புலித் தலைமையின் மக்கள் விரோதச் செயலுக்கு எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை வெளிக்காட்டுவோம் - என்று உள்ளது. (அ)


**விற்பனையாகிறது**

சிறுவர்களுக்கான CD- க்கள் அடிப்படைத் தமிழ் I,II, திருக்குறள், நீதிக்கதைகள், Nursery Rhyms Discovery, Cartoon இன்னும் ஏராளமான விடையங்கள்- விலை 70/=

அன்னை புத்தகசாலை,
*ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம் அருகில்(நவீன சந்தை) யாழ்ப்பாணம்.*
*222 9881*


## பொருள்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைப்பதை தடுக்கும் ஒரு நடவடிக்கையே கப்பல்கள் மீதான தாக்குதல்களாகும்.

விடுதலைப் புலிகளின் இரண்டு தாக்குதல் படகுகள் அழிக்கப்பட்டன. ஒன்று கைப்பற்றப்பட்டது.

வன்னியில் தோல் விகளைச் சந்தித்து வரும் விடுதலைப் புலிகள் தோல்வி யினை திசை திருப்ப இத் தாக்குதல் களை ஆரம்பித்துள் ளனர். இதன் மூலம் அரசை பணிய வைக்க முடியாது - என்றும் ரம்புக்வெல மேலும் கூறினார்.

இதேவேளை-

குடாநாட்டில் அரசு பொது மக்களுக்குமேற்கொண்டு வரும் உணவு விநியோகத்தை சீர்குலைப் பதற்காகவே காங்கேசன்துறையில் உணவுக் கப்பல் கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் - என்றும் ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த் தன தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கு அரசு அனுப்பி வைக்கும் அத்தியாவசியப் பொருள்களை அழித்து விட்டு, வடக்குமக்கள் அல்லற்படுகிறார்கள் என்று சர்வதேசத்துக்கு பிரசாரம் செய்யும் நோக்குடனேயே விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் உண்மை நிலையை அறிந்து அந்த விவரங்களை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த அங்கு இயங்கும் சர்வதேச அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

விடுதலைப்புலிகள் உணவுக் கப்பல்களை தாக்கினாலும், அரசு வடக்கு மக்களுக்கான கப்பல்களை தொடர்ந்து அனுப்பும். அதில் எந்த வித மாற்றமும் இருக்காது - என்றார். (அ-1)

## 25உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறிகளில் நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்கள் 50 லொறிகளில் அனுப்பி வைக்கப் படவுள்ளன என்றும் அமைச்சு தெரிவித்தது. (சி)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் அமைதி வழியிலான - பேச்சு மூலமாக எய்தப்படும் - அரசியல் தீர்வே இலங்கைக்கு தற்போதைக்குத் தேவைப்படுகின்றது என வலியுறுத்தியுள்ள பிரணாப் முகர்ஜி, இந்த அரசியல் தீர்வு இலங்கையில் தமிழ் சமூகம் உட்படஅனைத்து சிறுபான்மையினத்தவரினதும் நியாயபூர்வமான உரிமைகளை மதிப்பதாக அமைய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

"இலங்கை நிலைவரம் இந்திய அரசுக்கு ஆழ்ந்த கவலையளிப்பதாகவுள்ளது. குறிப்பாக வடபகுதியில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைகள் கவலையளிக்கின்றன" என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பாகவும் மோதலில் சிக்கியுள்ள மக்கள் குறித்தும் இந்தியா கவலையடைகின்றது என்றும் பிரணாப் முகர்ஜி கூறினார்.

"பொதுமக்களின் பாதுகாப்பை எப்பாடுபட்டாவது உறுதி செய்யவேண்டும். உணவும் மருந்தும் எந்தத் தடைகளுமின்றி அவர்களைச் சென்றடைய அனுமதிக்க வேண்டுமென இலங்கை அரசிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-சி)

## ஹொரவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6.30 மணியளவில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காட்டுப் பகுதியில் வீழ்ந்து கிடந்த மோட்டார் சைக்கிளின் அருகில் சடலம் ஒன்று காணப்பட்டதை அவதானித்த சிவிலியன் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.திருமலை மொறவெவப் பகுதியைச் சேர்ந்த விவசாயியான சிவா ரஞ்சன் (வயது - 33) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

சடலம் அநுராதபுர வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

## மல்லாகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் நேற்றுக்காலை சேர்க்கப்பட்டனர்.

சம்பவ நேரம் இராணுவத்தினரின் ஊரடங்கு அமுலில் இருந்ததினால் அவர்களை உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்க முடியாமல் போனது என்றும் கூறப்படுகிறது. இந்த ஷெல் தாக்குதல் எத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும்கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவத்தில் அந்தப்பகுதியில் உள்ள தண்ணீர்தாங்கி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

நேற்றுக்காலை அந்தப் பகுதிக்கு வந்த படையினர் ஷெல் விழுந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர்.

நீலியம்பணைப் பகுதியில் நேற்று பதற்றமான சூழல் நிலவியது.

(அ-1-25-86-78)

## ஒரு கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் இலக்கியா, மற்றும் கடற்புலிகளின் கொமாண்டோ லெப்டினன்ட் கேணல் குபேரன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா பாலசுப்பிரமணியம் (சைக்கிள் கடை மணியம்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாலசுப்பிரமணியம் நேற்று (22.10.2008)புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா -மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாரூபி (கனடா), தயாநிதி, தயாளினி (கனடா), பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகேந்திரன் (கனடா), குலேந்திரன், சத்தியமூர்த்தி (கனடா), விஜிந்தன் (C.T.B கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் அன்பு மாமனும், சரஸ்வதி, சிவயோகம் (புத்தளம்), சிதம்பரநாதன் (கனடா), கனகாம்பிகை (புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், றெஜிசன், அருணியா, நிரோசன் (கனடா), கஜீவன், மதுசன், தேனுசா மற்றும் அஸ்வின், அனுஷியா (கனடா)ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*செல்லப்பா வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*

தகவல்:
விஜிந்தன் (மருமகன்).

## திருமதி ஞானம்பிகை நடராஜா

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானம்பிகை நடராஜா நேற்று (22.10.2008) காலமானார்.

அன்னார் மா.நடராஜா (தலைவர், விவசாய சம்மேளனம், மூளாய், பொன்னாலை)யின் அன்பு மனைவியும், திருமதி பங்கயச்செல்வி யோகநாதனின் (ஆசிரியர், யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி), ந.பைந்தமிழ்ச்செல்வன், ந.செந்தமிழ்ச் செல்வன் (கிருஷ்ணா வெதுப்பகம், மூளாய்), ந.கலைச்செல்வி (கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்), ந.முத்தமிழ்ச்செல்வன் (மலேசியா), ந.அருள்மொழிச்செல்வன் (மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், வி.யோகநாதனின் அன்பு மாமியும், யோ.யக்சயன், யோ.ஆதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் தெற்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
குடும்பத்தினர்.


# ஏலவிற்பனை அறிவித்தல்

*சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை*

தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளையில் 30.09.2007 வரை அடகு வைத்து 30.09.2008 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

ஏல விற்பனைத் திகதி:- 29.11.2008 சனிக்கிழமை காலை 8.30
இடம்:- 141,V.M.K.கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி (கிளையில்)

**ஏலவிற்பனையை இரத்து செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது**

*உதவிப் பொது முகாமையாளர்(கடன்)- கொழும்பு- 3*
*சார்பக முகாமையாளர், சாவகச்சேரி.*

NSB


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org